3L
R673m211, N128
N32·5·12.
187170

Registered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 5—No. 12.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் ரு | ஆங்கீரச ஆண்டு மார்கழித் திங்கள் 1932 ஹு டிசம்பர் மீ | இதழ் கஉ

உள்ளுறை

உள்ளுறை	பக்கம்
தீண்டாமை	௨௪௧
திருப்பதிகம்	௨௪௩
உமாபதிசிவனார் திரட்டியருளிய அருள்முறைத் திரட்டு உரை	௨௪௭
மார்கழி மாதம் திருவெம்பாவை	[illegible]
திருஞானசம்பந்தர் புதிய திருப்பதிக ஆராய்ச்சி ...	[illegible]
திருவாசகம் உரையுடன் ...	கஉக - [illegible]

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 2-0-0. 1932 வெளி நாட்டுக்கு ரூ. 2-8-0.
தனிப் பிரதி அணா 4.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

“சித்தம் தெளிவிப்பான் அத்தன் ஆதரைப் பத்திமலர்தூவ முத்தி யாகுமே”

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

இருபத்தேழாம் ஆண்டுவிழா

சைவர் மகாநாடு, திருவிற்கோலம்

பேரன்புடையீர்,

சைவசித்தாந்த மகா சமாஜத்தின் இருபத்தேழாம் ஆண்டு நிறை விழாவும் அதை யொட்டிய சைவர் மகாநாடும் கூவம் என வழங்கும் திருவிற்கோலத்தில் கூவம் சைவசித்தாந்த சபையின் ஆதரவில் திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைவரும், மாஜி தாசில்தாரரும், உமாபதி சிவம் திருமுறைத் திரட்டின் உரையாசிரியருமாகிய சைவத்திரு வாளர் - மா - வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ. அவர்களின் தலைமையில், நிகழும் ஆங்கிரச ஆண்டு மார்கழித் திங்கள் ௧௬-ம் நாளுக்குச் சரியான 1932௵ டிசம்பர் ௴ 30௳ வெள்ளிக் கிழமை முதல் மூன்று நாட்கள் வரையில் அடியிற் காணும் முறைப்படி நடைபெறும். இதனை யடுத்து மங்கையர் தனிக்கூட்டமும், இளைஞர் தனிக்கூட்டமும் முறையே ஸ்ரீமதி பண்டிதை எஸ். கிருஷ்ணவேணி யம்மாள், கிழக்கு மருதூர் - திரு. தி. கு. தி. நாராயணசாமி நாயடு அவர்கள் தலைமைகளில் நடைபெறும். தாங்கள் தங்கள் சபையினரோடும், வாழ்க்கைத்துணை, மக்கள் முதலிய உறவினரோடும், ஏனைய அன்பர்களோடும் வந்திருந்து ஆண்டு நிறை விழாவையும் மகாநாட்டையும் சிறப்பாக நடத்திவைக்கும்படி வேண்டுகிறோம். இம் மகாநாட்டில் தீண்டாதாரின் சமய உரிமைகள் ஆலோசிக்கப்படு மாகையால் ஒவ்வொரு சைவ சபையும் தகுந்த பிரதிநிதிகளை யனுப்பி உபகரிக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம் : தங்கள் அன்புள்ள,

அ. சோமசுந்தரம் செட்டியார், எம்.ஏ.,
சமாஜ உதவித் தலைவர்.

வீ. துரைசாமி முதலியார்,
வரவேற்புத் தலைவர்.

ம. பாலசுப்பிரமணியன்,
காரியதரிசி.

நிகழ்ச்சி முறை

ஆங்கிரச௵ மார்கழி௴ ௧௬௳ வெள்ளிக்கிழமை (30-12-1932)

மாலை 4-30— 5 கடவுள் வணக்கம், தலைவர் நியமனம், தலைவர் வரவேற்பு, ஆண்டு அறிக்கைப் பத்திரம் அங்கீகரித்தல்.

„ 5 — 6 தலைவர் பேருரை.

„ 6 — 6-30 திரு. கி. குப்புச்சாமி முதலியார், திருக்குறள் விளக்க ஆசிரியர், கிருஷ்ணாம்பேட்டை “திருவெம்பாவை”.

„ 6-30— 7 திரு. ச. சிவகுருநாத பிள்ளை, சைவப்பிரகாச அச்சுக்கூட உரிமையாளர், தூத்துக்குடி “சிவஞானசித்தி”.

„ 7 — 7-30 திரு. மறை - திருநாவுக்கரசு (உயர் திரு - மறைமலை யடிகள் புதல்வர்) தமிழாசிரியர், கார்பொரேஷன் ஹைஸ்கூல், நுங்கம்பாக்கம் “மெய்ப்பொருள் நாயனார்”.

„ 7-30— 8 தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

ஆங்கிரச௵ மார்கழி௴ ௧௭௳ சனிக்கிழமை (31-12-1932)

காலை 8— 10 சைவத்திரு - தி. கு. தி. நாராயணசாமி நாயடு அவர்கள் தலைமையில் இளைஞர் தனிக்கூட்டம். மறை. திருநாவுக்கரசு முதலிய இளைஞர்கள் பேசுவார்கள். தீர்மானங்கள் நிறைவேறும்.

„ 10 — 12 தேவாரப் பரிசுப்போட்டிச் சீட்டுகள் பரிசோதிக்கப்பட்டு, குறுக்கப் பெற்ற ஆறு பரிசுகள் எடுக்கப்படும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

OFFICE OF THE REGISTRA

சென்னை, சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
மாதத் தமிழ்ப் பத்திரிகை

மலர் ஐந்து

1932

பத்திராசிரியர்:

ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல்.,
அட்வகேட், சென்னை.

உதவிப் பத்திராசிரியர்:

திரு. வி. உலகநாத முதலியார்,
உரிமையாளர், சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

150, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை.

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

182170

சித்தாந்தம் ஐந்தாவது மலரின் உள்ளுறை

அரசாங்கம் அங்கீகரித்தது ...	காரியதரிசி	129
அறிவியல் அழகியல் அன்பியல் ...	பத்திராசிரியர்	241
இருபத்தாறும் ஆண்டு அறிக்கைப்பத்திரம்	சமாஜம்	29
உமாபதிசிவம் அருள்முறைத் திரட்டுரை..	மா. வே. நெல்லையப்ப பிள்ளை	113, 185, 233, 257, 281, 297
எலும்புக்கூட்டில் உயிரைப் படைத்தல் ...		162
ஐயவினாக்களுக்கு விடை ...	க. சோமசுந்தர செட்டியார்	216
ஒளி ...	P. பொன்னரங்க முதலியார்	226
கா கா கா ...	பத்திராசிரியர்	65
குருடர்கள் திருப்பதிகம் விண்ணப்பித்த கல்வெட்டு ...	சிருமிகண்டன்	167
சடையன் விடையன் ...	பத்திராசிரியர்	265
சமாதான உரை ...	மா. வே. நெல்லையப்ப பிள்ளை	228
சமாஜ 26-ம் ஆண்டு விழா ...	காரியதரிசி	19
சம்பந்தரும் சோதிடமும் ...	ஈ. த. சொக்கம்மாள்	16
ஷை ஷை ...	க. சோமசுந்தர செட்டியார்	86
சிவஞான போத விளக்கம் ...	கி. குப்புச்சாமி முதலியார்	5, 193, 249, 269
சிவாலய வழிபாட்டின் நுட்பங்கள் ...	சுவாமி நாதசிவாசாரியார்	69
சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைமையுரை	சாமி வேலாயுதம் பிள்ளை	78
சைவ சமயம் ...	பத்திராசிரியர்	121
சைவமும் உயர் குலமும் ...	பொ. முத்தைய பிள்ளை பத்திராசிரியர்	255
சைவரும் விக்கிரக ஆராதனையும் ...	ஈ. த. சொக்கம்மாள்	215
சொற்பொழிவுக் குறிப்புகள் ...	ச. சச்சிதாநந்தம் பிள்ளை	163, 199, 278
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்	பத்திராசிரியர்	1
திருக்கோகர்ணம் ...	பத்திராசிரியர்	33
திருஞான சம்பந்தர் புதிய திருப்பதிக ஆராய்ச்சி ...	E. N. தணிகாசல முதலியார்	307
திருநாளைப் போவார் ...	பத்திராசிரியர்	217
திருநெல் வெண்ணெய் சாசனம் ...	தி. கு. கி. நாராயணசாமி நாயடு	268
திருப்பதிகம் ...	ஷை	291
திருப்பருப்பதம் ...	பத்திராசிரியர்	97
திருமயிலையமக அந்தாதி ...	இலக்கண விளக்க பரம்பரை சோமசுந்தர தேசிகர்	129
திருவகுப்பு ...	பெயர் விழையான்	40, 92, 212

திருவள்ளுவரும் உளநூலும்	...	கா. சுப்பிரமணிய பிள்ளை	170
திருவாசகத்தில் ஒரு மணிவாசகம்	...	அ. வரதநஞ்சைய பிள்ளை	230
திருவிசைப்பா ஆசிரியர்கள்	...	இலக்கண விளக்க பரம்பரை	
		சோமசுந்தர தேசிகர்	75
திரோதாயி	...	கி. குப்புச்சாமி முதலியார்	248
தினசரி வாழ்வில் பௌதிக அறிவு	...	பத்திராசிரியர்	145
தீண்டாமை	...	பத்திராசிரியர்	289
தேவாரங்களும் மறையும்	...	ஈ. த. சொக்கம்மாள்	175
நாவலூரில் நல்விழா	...	காரியதரிசி	232
பஞ்சாக்கரமாலை			47
பிறவிக்கடல் நீத்தபிரான்	...	சே. சிவஞானம்பிள்ளை	107, 139
பெரிய புராணத்தில் இடைச்செருகல்கள்			
எவை	...	தி. கு. கி. நாராயணசாமி நாயடு	87
ஷை ஷை	...	C.K. சுப்பிரமணிய முதலியார்.	100, 160
பெரிய புராணம்	...	பத்திராசிரியர்	169
மதுரையில் சைவப் பிரசங்கங்கள்	...	J. N. இராமநாதன்	27
மறைஞான சம்பந்தர்	...	இலக்கண விளக்க பரம்பரை	
		சோமசுந்தர தேசிகர்	182, 205
மறை திருநாவுக்கரசு அவர்களின் சொற்பொழிவு			25
மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம்	...	பத்திராசிரியர்	178
முருகனே கலியுக தெய்வம்	...	P. பொன்னரங்க முதலியார்	11
மார்கழி மாதம் திருவெம்பாவை	...	மட்டுவில் சி. சுப்பிரமணிய ஐயர்	305
மூலமந்திரம் ஓதல்	...	ஷை	153
வெளிவாராத திருநாவலூரிலுள்ள			
சுந்தரர் கல்வெட்டு	...	தி. கு. கி. நாராயணசாமி நாயடு	38

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு "

மலர் ரு	ஆங்கீரச ஆண்டு மார்கழித் திங்கள் 1932 ஞூ டிசம்பர்மீ	இதழ் கஉ

தீண்டாமை

[பத்திராசிரியர்]

நமது பிறப்பிருப் பிறப்புகட்கு நிலைக்களமாகவுள்ள இந்தியா தேசத்திலே ஏறக்குறைய இருபத்தைந்து கோடிமக்கள் ஹிந்துக்களாக வுள்ளார்கள். இவர்களுள் ஐந்தில் ஒரு பங்கினர் தாழ்த்தப்பட்டவர், ஒடுக்கப்பட்டவர், பறையர், புலையர், ஆதிஹிந்துக்கள் எனப் பலவகையாகப் பெயரிடப்பட்டுள்ள தீண்டாதவர்களா கின்றார்கள். இவர்களைத் தீண்டாது புறக்கணித்து இவர்களோடு சமய[illegible] சமூகம், அரசியல் முதலிய பலதுறைகளில் வேற்றுமையின்றிக் [illegible]ந்து ஒத்துழையாததினால் சமயச் சீர்கேடு, சமூகத்தாழ்வு, அர[illegible]டிமைவாழ்வு முதலிய கொடுமைகள் நமது தேசத்தில் இருப்பதாகவும், இக்குறைகளை நீக்குவதற்கு ஹிந்துக்களனைவரும் அதிதீவிரமாக முயற்சி செய்யவேண்டுமென்றும் அரசியல் வாதிகள் கூறுகின்றனர். சமயத் துறையிலே மட்டும் நின்று தொண்டாற்றுவோர் பலர் இதை ஆக்ஷேபித்தும், சிலர் இதை ஆதரித்தும் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளார்கள். பரோடா, காஷ்மீரம் என்ற இரண்டு நாட்டுச் சுதேச மன்னர்கள் தீண்டாதாருக்கு ஆலயப்பிரவேச உரிமையைத் தந்துள்ளார்கள். சென்னைச் சட்ட சபையில் தீண்டாதாருக்கு ஆலயப்பிரவேச உரிமை தரவேண்டுமென்ற ஒரு தீர்மானம் எதிர்ப்பின்றி நிறைவேறிற்று.

திருப்பாதிரிப் புலியூரிலும் திருநெல்வேலியிலும் 1929ஞூல் கூடிய அகில தென்னிந்திய சைவர்மகாநாடும் சைவப் பெரியார் தனிக் கூட்டமும் " சைவசமயங்களுள் சைவ ஆசாரமுடைய எம்மரபினர்க்கும் ஆலயவழிபாடு

கி. பி. 847. இது திருப்பதிகம் குறித்துப் பொதுவாகவும் சுருக்கமாகவும் கூறுகிறது. இதற்கு அடுத்து வருவது *மதுரையும் ஈழமும் கொண்ட பரகேசரவர்மரான முதற் பராந்தகனது 41-ம் ஆண்டில் அல்லூர் பசுபதீஸ்வரர் கோயில் தென்சுவரில் செதுக்கியது. இதன் மூலம் வெளியாகவில்லை. இதில் பதிகம் குறித்து வந்திருப்பதாக சாசன ஆராய்ச்சி வல்லுநரான வெங்கைய்யா கூறியதை அடிக்குறிப்பில் காண்க. இவ்வெட்டின் காலம் கி. பி. 948. முன்னதின்பின் நாளுண்டுகள் கழிந்து இச்சாசனம் பயின்றுளது கவனிக்கத் தகுந்தது. இதன் பின் மதுராந்தக உத்தம சோழன் காலத்தில் திருப்பதிக விண்ணப்பத்திற்கு இரண்டு சிலாலேகை பொறித்துளது. அவற்றில் முன்னது கோனேரி ராஜபுரத்தில் (திருநல்லம்) †கண்டராதித்தர் மனைவி செம்பியன் மாதேவி செய்தது. இதன் காலம் கி. பி. 976. இச்சாசனத்தின் வரி 61-ல் 'திருப்பதியம் பாடுவார் இருவற்கு நிசதம் தூணி பதக்காக ஓராட்டைக்கு நெல்லு நூற்றெண்பதின் கலத்துக்கு பூங்குடியில் ஒன்றே யெழுமாகாணி யரைக்காணி முந்திரிகை' யென்றும், வரி 88-ல் 'திருப்பதியம் பாடுவாரிருவர்க்கு மனை முந்திரிகைக்கி * * *' என்றும் நடை செல்கிறது. இவ்வெட்டில்தான் காலத்தால் முதலாக இருவர் ஏற்பட்டதும், அவ்விருவற்கு ஆண்டுக்குரிய உணவிற்கும் இருக்க இடத்திற்கும் வசதி ஏற்படுவது காண்கிறோம். ‡இதன் பின்னது கி. பி. 983-வது ஆண்டில் வெட்டியது. இதில் குறிப்பிடத்தக்கது ஒன்றுமில்லை. இவ்வுத்தமச் சோழன் பிதாமகன் முதற் பராந்தகன். இவர்கட்கு இடையில் நாட்டின் நிலை சீர்குலைந்திருந்ததால் சமய சம்பந்தமான கல்வெட்டுகள் அதிகம் பயிலவில்லை போலும்!

உத்தமச் சோழனுக்குப் பின் அரி அணை ஏறியவன் தஞ்சை இராஜராஜன். இச்சிவபாத சேகரன் ஆட்சியில் தான் முதன் முதலாகத் திருப்பதிகத்திற்கு ஒரு சிறப்புக் கல்வெட்டு கிடைத்திருக்கிறது. இச்சாசனம் ஒன்றே பதிக விண்ணப்பத்திற்கென ஏற்பட்ட சிறப்புடையது. இதன் முக்கியப் பகுதி வருமாறு :—

> * * ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தோன்பதாவது வரை உடையார் ஸ்ரீ ராஜ ராஜீஸ்வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும் இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும், இவர்களிலே நிலையாய்க் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனும், ஆக ஐம்பதின்மர்க்குப் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் ராஜ கேசரியோ டொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தே பெறவும் இவர்களில் செத்தார்க்கும் அனுதேசம் போனார்க்குந் தலைமாறு அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் அந்நெல்லுப் பெற்றுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்யவும் அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் தாந்தாம் யோக்யர் அல்லாவிடில் யோக்யராயிருப்பாரை ஆளிட்டுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வித்து அந்நெல்லுப் பெறவும்; அவ்வர்க்கு அடுத்த முறை கடவாரின்றி யொழியில் அந்த நியாயத்தாரே யோக்யராயிருப்பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய இட்டு, இட்ட அவனே அவ்வவர்பெறும் படி நெல்லுப் பெறவும் ஆக இப்படி உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது.

* 373 (1903) : A. S. I. 1905-06 P. 72. The three great Saiva Saints of the Tamil Country and their hymns known as the Devaram, which forms part of the scriptures of the Tamil Saivas, were not forgotten in the time of Parantaka I. is evident from an inscription of his forty first year found in the பசுபதீஸ்வரர் temple at அல்லூர் in the Trichy Dt. Provision is here made for the singing of the திருப்பதியம் hymns (every day). This reference to தேவாரம் is important.

† S. I. I. vol III No 151 A.

‡ S. I. 1. Vol III No 139. &. 13.

கி. பி. 1014-ல் ஏற்பட்ட இச்சாசனத்தில் விண்ணப்பிக்க ஐம்பதின்மருள்ள குழு அமைத்ததும் இவர்களில் ஒலிக்கருவியாகிய உடுக்கை, கொட்டி மத்தளம் வாசிக்க இருவரும், இவர்கட்குப் பின் வருவார் இன்னாரென்பதும், அவர்கட்குரிய யோக்கியதையை வற்புறுத்திக்கூறுவதும், அவர்கட்கு தினவேதனம் முக்குறுணி என்பதும் தெரிகிறது. இதில் எத்தனை சந்தி விண்ணப்பித்தார்கள் என்பதும் பிறவும் தெரியவில்லை. சமீபத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழக சரித்திர ஆசிரியர் ச.க. கோவிந்தசாமிப்பிள்ளை, M. A. அவர்கள் தஞ்சை பெரிய கோயிலில் சுவற்றுச் சித்திரங்கள் கண்டுபிடித்தனவற்றில் ஒன்று இராஜ ராஜன் யானையின்மேல் தேவாரம் ஓதும்போது வைத்திருக்கும் தாளங்களோடிருப்பது. இவ்வோவியத்தால் இவன் எவ்வளவு அளவில் திருப்பதிகங்களை நேசித்தான் என்பது அறியலாம்.

திருப்பதிகம் ஓதுதற்கு *விண்ணப்பித்தல் என்று கல்வெட்டு கூறுகிறது. இவ்விண்ணப்பமும் †இரண்டு அல்லது ‡மூன்று சந்தியும் செய்ததாக அறிகிறோம். மற்றும் பாடலை ¶அனுபவத்தின்படி பாடியதாகத் தெரிகிறது. இறைவன் முன்பு ஓத ஆண் மக்கள் பெற்ற உரிமைபோல் பெண் மக்களும் பெற்றிருந்தது §திருவொற்றியூர் சாசனம் முன்பு நிமந்தமுடைய தேவரடியார் மேல் ஏற்றமாக திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய பெண்டுகள் பன்னிருவர்க்கும்.' என்று கூறுவது காண்க. பதிகம் குருடர்களுக்கு உய்வளித்தமை பின் வரும் வரிகளால் அறிக.

> ||ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு இரண்டாவது இராஜ ராஜ வளநாட்டுப் பனையூர் நாட்டு வாவலூர் நாட்டுத் தேவதானம்: திருவாமாத்தூர் ஆளுடைய அழகிய தேவர் கோயிலில் திருபதிகம் பாடி வரும் குருடர்களைத் தவித்து நம் தேவாரத்து திருப்பதியம் பாடும் பொய்யாத சேவடி தேவர் கணநாதனன இராஜ ராஜ பிச்சனுக்கும் இவன் வர்க்கத்தார்க்கும் இக்கோயிற் திருப்பதியக் காணியான இவ்வூர் முதல் காணியாக குடுத்தோம். இவன் வர்கத்தாரையும் மெய் இட்டுத் திருப்பதியம் பாடுவித்துக் கொண்டு குருடர்களுக்கு விட்டு வரும் நிவந்தப்படி இவர்களுக்கும் விட்டுக் கல்வெட்டுகவென்று திருவாய் மொழிந்து திருமுகம் பிரசாதஞ் செய்து வந்தமையில் இக்குருடர்கள் முன்பி

* 433 (1903) ; S. I. I. Vol II No 65; 128 (1912) †280 (1917) ‡433 (1903); 96 (1925) §128 (1912) ¶433 (1903) ||பூ மேவுவளர் - மெய்க் கீர்த்திவுடையது; 433 (1903).

லாண்டுகள் அநுபவத்தின்படி பாடிவருங் குருடர்கள் பேர்பதனறுவரும் இவர்களுக்கு கண் காட்டுவார் இருவரும் ஆகப் பேர்பதினெண்மர்க்கு பேரால் நெல்லு பதக்காக, நாளொன்றுக்கு நெல்லு முக்கலமாக, நாள் முன்னூற்றறுபதுக்கு நெல்லு ஆயிரத்தெண்பதின் கலமும், புடவை முதலுக்கு பேரால் காசு ஒன்றாக காசு பதினெட்டுக்கு காசு ஒன்றுக்கு நெல்லு இருபதின் கலமாக வந்த நெல்லு ஆயிரத்து நானூற்று நாற்பதின் கலத்திற்கு, வேலி ஒன்றுக்கு நெல்லு நூற்றிரு பதின்கலமாக இத்தேவர் தேவதானம் கடுவனூரில் விட்ட நிலம் பன்னிரு வேலி. இந்நிலம் பன்னிரு வேலியும் காணியாக இவ்வூர் நிலங் கலந்தபடியே கைக்கொண்டு இத்திருப்பதியம் பாடுவார் பேர்பதினெண்மரும் மூன்று சந்தியும் வந்து திருப்பதியம் விண்ணப்பஞ் செய்து முன்பிலாண்டுகள் இக்குருடர்கள் நிலங் கைக்கொண்டு செய்து வரும்படியே இத்திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வாரும் செய்துவரக் கடவார்களாக.

இச்சாசனத்தில் துணிக்கும் ஏற்பாடு இருப்பது கவனிக்க உரியது. இறைவனது பல்வகைத் திருமேனி பற்பல நிலைகளுக்கு உரித்தாயதுபோல தஞ்சை இராஜராஜனுக்கு ஒரு மேனி தேவாரம் கேட்பதற்கென அமைந்தது காண்க.

*பெரிய பெருமாளுக்கு தேவார தேவராக எழுந்தருளுவித்த தேவர் பதாதிகேசாந்தம் ஐவிரலே இரண்டு தொரை உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தமும் உடையராகக் கனமாகப் பித்தளையால் எழுந்தருளுவித்த சந்திரசேகர தேவர் திருமேனி ஒன்று.

பக்க ஒலிக்கருவி (1) உடுக்கை. (2) கொட்டிமத்தளம், (3) தாளம் முதலியன வருகின்றன. "திருமுறை தேவாரச் செல்வன்"என்று இரண்டு †இடங்களில் காணப்படுவதிலிருந்து திருமுறை அக்காலத்திற்குமுன் வகுத்தது தெரியவரும். இவ்விரு பட்டயங்களால் தேவாரம் திருமுறை யென்பதும் அறிகிறோம். கோயில்களில் (4) அர்த்தமண்டபம், (4) மகாமண்டபம், (5) வியாக்யான மண்டபம், (6) புராணமண்டபம் இருப்பது போன்று திருமுறை மண்டபம் இருந்தமை 'எந்தை கோயிலுள் திருமுறை மண்டபமொடுத்து' என்ற உபதேசகாண்ட அடிகளைக் காண்க. இதற்கு சிதம்பரத்தில் ஒரு வெண்பா, சாசனமாக இருக்கிறது.

‡கட்டப்பெருமான் நாம் ஞானங்குழைத்தளித்த
சிட்டப்பெருமான் திருப்பதியம் முட்டாமைக்
கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான் தேவ வேந்தர் கெட
வாட்டிக்கும் தொண்டையர் கோன்மன்.

நிற்க, தென்னிந்தியசாசன இரண்டாம் பதுமம் 20-ம் சாசன 121-வது வரியில்'கோப்பரகேசரிவன்மரான உடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவர்க்கு யாண்டு கூ-ஆவது நாள் இருநூற்று நாற்பத்திரண்டினால் உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர் கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலினுள்ளால்

* S. I. I. Vol II † 158 (1911); 10 (1918) ‡ S. I. I. Vol IV, No. 225 L 15. (1) S. I. I. Vol. II No 65; 129 (1914.) (2) S. I. I. Vol. II. No. 65. (3) 129 (1914.) (4) 420 (1924.) (5) 110 (1912). (6) சீர் கல்வெட்டு.

முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்து தேவாரத்துச் சுற்றுக் கல்லூரியில் தானஞ் செய்தருளா இருந்து' என்று செல்கிறது. இதில் வரும் 'தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி' யென்பது தேவாரக் கல்லூரியா என்பது பின் ஆராய்ச்சிக்குரியது.

தேவார ஏடுகளைப் பார்த்துப் புதுப்பிக்க வேண்டியவற்றைப் புதுப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதாக *சீர்காழிக் கல்வெட்டு கூறுகிறது. செப்பேடு செய்தது சிதம்பர சாசன வெண்பாவொன்றில் வருகிறது.

†முத்திறத் தாரீசன் முதற்றிறத்தை பாடியவர்
ஒக்கமைத்த செப்பேட்டி னுள்ளின்—எழுதி
தலக்கிலெல்லைக் கிரிவாயிசை யெழுதினன்
கூத்தன் தில்லைச் சிற்றம் பலத்தே சென்று.

இவ்வெண்பாவில் முத்திறத்தினர் தேவாரம் பாடியதாகக் கூறுவது கவனிக்க உரியது.

திருக்குகூர் ‡அமரவனீஸ்வரர் கோயில் வடசுவரில் அதிராஜேந்திர தேவன் மூன்றாம் ஆண்டில் ஒரு சாசனம் அரசர்க்காக இரண்டு சந்தியும் திருப்பதியம் விண்ணப்பித்தமை தெரிகிறது. இதில் அரசர்க்காக வென்பது அரசர் உடல் நலத்திற்கென சாசனக்காரர் கூறுதலின், பதிக விண்ணப்பம் நலம் பயக்குமென்ற நம்பிக்கை அற்றை நாளில் ஏற்பட்டமை அறிகிறோம். மற்றும் நமக்கு இற்றைநாள்வரை கிடைக்கப்பெறாத திருவிடைவாய் சம்பந்தர் தேவாரம் கல்வெட்டாகக் கிடைத்தது சாசன ஆராய்ச்சியின் அவசியத்தை நிலை நாட்டுகிறது.

ஆறும் மதியும் பொதிவே ணியனூரா
மாறில் பெருஞ்செல் வம்மலி விடைவாயை
நாறும் பொழிற்கா ழியர்ஞா னசம்பந்தன்
கூறுந் தமிழ்வல் லவர்குற் றமற்றோரே.

இப்பதிகங்களில் சிறப்பாகப் பாராட்டக்கூடிய (1) தாண்டகம், (2) திருத்தொண்டத்தொகை முதலியவற்றைக் குறித்தும் சாசனங்கள் கூறுகின்றன. விண்ணப்பித்தார் பெயர்களை இராஜராஜன் கல்வெட்டு கூறுகிறது. அவை வருமாறு:—

பாலன் திருவாஞ்சியத்தடிகளான ராஜராஜ பிச்சன், திருவெண்ணவல் செம்பொற் சோதி, தக்ஷிணமேரு விடங்கப்பிச்சன், அம்பலத்தாடி, பொற்சுவரன் திருநாவுக்கரையன், மாதேவன் ஞானசம்பந்தன், கயிலாயன், ஆரூரன், செட்டி எடுத்த பாதம், இராமன் சம்பந்தன், அம்பலவன் பக்தர், கம்பன் திருநாவுக்கரையன், நக்கன்சீராளன், அப்பிநாவுக்கரையன், சிவக்கொழுந்து சீராளன், ஐந்நூற்றுவன் வெண்காடன், திருமறைக்காடன், அம்பலக்கூத்தன், ஆரூரன் நாவுக்கரையன், கூத்தன் மிழலைச் சிலம்பன், சம்பந்தன் ஆரூரன், பிச்சன், காசிபன்,

* 281 (1918.) †S. I. I. Vol. IV No 225 L. 21. ‡280 (1917.) (1) 219 (1917); (2) 137 (1912); S. I. I. Vol IV. No. 223 திருமாசித் திருநாளில் திருத்தொண்டத்தொகை விண்ணப்பம் செய்வார்க்கு.

சுப்ரமண்யன், கூத்தன் அமரபுஜங்கன், திருவாய்மூரான், திருமலைக்கூத்தன், தில்லைக்காசன், காளிசம்பந்தன், காபாலி கவாலி, நமசிவாயன், சிவன் ஆனந்தன், சிவக்கொழுந்து சம்பந்தன் *நம்பி ஆரூரான், சோமன், ஐயாறன் பெண்ணோர் பாகன், ராஜாதித்தன், செல்வன் கணவதி - என்பன.

இப்பெயர்கள் ஒவ்வொன்றும் பின்வரும் பெயர்களிலொன்றால் முடிபுறுகிறது.

சதாசிவன், ஞானசிவன், மனோத்தமசிவன், பூர்வசிவன், தர்மசிவன், கவச்சசிவன், சத்தியசிவன், வாமசிவன், நேத்திரசிவன், ஓங்காரசிவன், தத்புருஷசிவன், உருத்திரசிவன், அகோரசிவன் யோகசிவன், ஈசானசிவன், இருதயசிவன்.

இப்பெயர்கள் தீக்கை நாமமாயென்பது பின் ஆராய்ச்சிக்கு விடப்பட்ட ஐயப்பாடு.

திருமுறை ஓதிச்செல்வதின் காரணமாகப் பூசல் விளைந்து ஒருவன் உயிர் துறந்ததை வெண்ணெய்நல்லூர் †சாசனம் கூறுகிறது. இனிப் பதிகத்திற்கு முன்னும் பின்னும் திருச்சிற்றம்பலம் தீட்டும் வழக்கம் உண்டோவென்பது நன்றாகத் தெரியவில்லை. ஆனால் பதிகம் குறித்துவாராத கல்வெட்டொன்று திருச்சிற்றம்பலம் என்று முடிவதைக் காட்டிக் கட்டுரையை முடிப்பாம்.

‡ஸ்ரீ பாதம் என் தலை மேலது ஹர திருச்சிற்றம்பலம்.

---

*S. I. I. Vol. 6. No 33. †437 (1921). ‡118 (1698) of S. I. I. Vol. VI.

முக்கிய அறிக்கை

சந்தா நேயர்கள், 1933-ம் ஹூத்துக்குரிய சந்தா ரூபா இரண்டையும் மணியார்டர் செய்ய வேண்டுகிறோம். அப்படி அனுப்பாதவர்கட்கு அடுத்த இதழ் வி. பி. மூலம் அனுப்பப்படும். அதனால் வி. பி. ரிஜிஸ்தர் செலவு மூன்றணா வீண் நஷ்டமாகும்.

காரியதரிசி.

மதிப்புரை

திருக்குறள் காட்குறிப்பு - 1933-ம் ஹூத்திய டயரி - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு - சென்ற ஆண்டு டயரியைவிட இது மிக அழகாக வுள்ளது. ஒவ்வொரு நாளுக்கும் ஒரு குறள், உரையோடு மிளிர்கின்றது. தமிழில் ஆர்வமுடைய ஒவ்வொரு தமிழரிடமும் ஒரு பிரதி இருக்கவேண்டுவது மிக அவசியம். விலை அணா 5.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உமாபதிசிவனார் திரட்டியருளிய அருள்முறைத் திரட்டு உரை

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

(இதழ் கக, 288-ம் பக்கத் தொடர்ச்சி)

(**விளக்கம்**) 'கொள்ளைக் குழைக்காதில்' - என்பதைக் 'காதில் ஐக்குழை கொள்' எனக்கொண்டு கூட்டுக. ஐ + குழை = ஐக்குழை எனக் ககர ஒற்றிரட்டித்தது. 'காது' என்பது இரண்டு காதுகளையும். 'குழை' என்பது இரண்டு குண்டலங்களையும் குறிக்கின்றன. குண்டைப்பூதம் - பூதங்கள் குறுகியனவும் தடித்தனவுமாயுள்ள உடல்களை உடையன ஆதலின், குண்டைப்பூதம் என்றார். பூதம் - பூதங்கள். சாதி ஒருமை - திருஞான சம்பந்த அடிகள் "குண்டைக்குறட் பூதம் குழும" என்று திருவதிகை வீரட்டானத் தேவாரம் க-வது பாட்டிற் (46-1) கூறியிருத்தல் காண்க. கொடு கொட்டி - ஒரு வகைப் பறை. கொட்டிக் குனித்துப் பாட, சிவபெருமான் நடனஞ் செய்யும் பொழுது பூதங்கள் தாளம் போட்டுப் பாடி ஆடுதலை அடிகள், "குழலோடு கொக்கரைகை தாளம் மொந்தைக்குறட் பூதமுன்பாடத் தானாடும்மே" என்று திருவதிகை வீரட்டானம் அடையாளத் திருத்தாண்டகம். எ - வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. விகிர்தனார் - இந்தச் சொல்லினது குறிப்புரையை அருள் முறைத்திரட்டு எ - வது பாட்டின் கீழ் நான் எழுதிய உரையிற் பார்க்க. (இதழ் ச, பக்கம் க௨௦) உள்ளம் கவர்ந்திட்டுப் போவார் போல - 'உள்ளம் கவர்தல்' என்பது சிற்றின்பத் துறையில் காமரசம் அறியும் பருவம் அடைந்திருக்கிற தலைவிதனது உள்ளத்தை அவளை எதிர்ப்பட்ட தலைவன் வயப்படுத்தித் தன்னை அடையச் செய்தலாகும். பேரின்பத் துறையில் பேரின்பச் சுவையை அறியும் பருவமடைந்திருக்கிற உயிரைச் சிவபெருமான் உலக வாழ்வு வழியினின்று திருப்பி அதன் வயமொழிந்து தம் வயப்படும்படி செய்தலாகும். உயிர் தன்னுடைய ஏகதேச அறிவு வேட்கை செயல்கள் சிவபெருமானுடைய வியாபக அறிவு வேட்கை செயல்களுக்குள் அடங்கி நின்று ஒழுகுதல், உயிர் சிவபெருமானுடைய வயப்படுதலாகும். போவார் போல - ஒருவாறு பக்குவம் அடைந்து வருகிற உயிர்க்குச் சிவபெருமானது அருட்செயல் நன்கு விளங்காததால் "போவார் போல" என்றார். உழிதர்வர் = உழிதர்தல் - திரிதல். உழிதருதல் என்றும் சொல்லுவது உண்டு. சிற்றின்பத் துறையில் உள்ளத்தில் உழிதர்தல் என்பது தலைவியினுடைய உள்ளத்தைவிட்டுத் தலைவன் நீங்காதிருத்தல். "நெஞ்சத்தார் காதலவாக வெய்துண்டல் - அஞ்சுதுமவே பாக்கறிந்து" என்ற 1128-வது திருக்குறட் கருத்தை நோக்குக. பேரின்பத் துறையில் சிவபெருமான் உயிரினுடைய உள்ளத்தில் நடனம் செய்தலாகும். சிவபெருமான் அண்டத்திற்போலப் பிண்டத்திலும் உயிரினது உள்ளத்தில் ஐந்தொழிலாகிய நடனத்தை எப்பொழுதும் செய்துகொண்டிருக்கிறார். இங்கே பக்குவமடைந்து வருகிற உயிருக்குச் சிவபெருமான் அருளல் ஆகிய நடனம் செய்தலால் அந்நடனம் ஞானநடனம் என்று கூறப்பட்டது. நான் தெரியமாட்டேன் மீண்டேன் - மாட்டாமை = இயலாமை. சிற்றின்பத் துறையில் தலைவன் தனது உள்ளத்தைவிட்டு நீங்காமலிருத்தலைத் தலைவி அறிந்துகொண்டாலும் அவன் வயப்படாமலிருத்தலாகும். பேரின்பத்துறையில் உயிர் தனது உள்ளத்தில் சிவபெருமான் நடனம் செய்துகொண்டிருத்தலை அறிந்தாலும் நடனம் செய்யும் கருத்தை அறிந்து அவன் வயப்படாமலிருத்தலாகும். "மறுத்தனன் யானுன்னருளறியாமையில்" என்று மாணிக்கவாசக அடிகள் கூறுதல் காண்க. (நீத்தல் விண்ணப்பம் கூ - வது பாட்டு) காணக் கண்ணாற் கள்ளவிழி விழிப்பர்-சிற்றின்பத்துறையில் தலைவன் தலைவிக்குத் தனது கண்களாற்பார்க்கும் பொதுநோக்காலன்றித் தனது உட்கருத்தை அறிவிக்கும் சிறப்பு நோக்காற்

187170.

பார்த்தல். அந்நோக்கு உட்கருத்தை மறைத்துவைத்திருத்தலால்'கள்ளவிழி விழிப்பர்'என்றார். தலைவியைத் தன்வயப்படுத்துதல் அந்நோக்கத்தின் உட்கருத்தாகும். "நெற்றி, மேற் கண்காட்டி நிறையுங் கொண்டீர்" என்று அடிகள் திருஆமாத்தூர்த்திருத்தாண்டகம் அ-வதுபாட்டிற் கூறியருளினமைகாண்க. பேரின்பத்துறையில் ஒருவாறுபக்குவமடைந்தும் தமது ஞான நடனத்தின் கருத்தாகிய அருளை அறியாதிருக்கிற உயிருக்கு அதனை அவ்வுயிர் அறியும்படி செய்யச் சிவபெருமான் தமது அருட் பார்வையால் மெய்யுணர்வு உண்டாகும்படி நோக்குதல் ஆகும். ஊனக்கண்களுக்கு வேருகப் பக்குவமடையாத உயிர்கள் காணக்கூடாத கண்ணுயிருத்தலால் நெற்றிக்கண்களைக் 'காணுக்கண்' என்றார். அந்நோக்குப் பருவமடையாத உயிர்களுக்குத் தெரியாது மறைவாயிருத்தலால், "கள்ள விழி விழிப்பர்" என்றார். காணுக்கண்ணுற் 'கள்ள விழி விழிப்பர்' என்றதனுல் சிவபெருமான் உயிரினுடன் கலந்து நின்று உயிருக்குச் செய்யும் காட்டும் உதவியும் சிவபெருமான் பாசஞானத்தால் அறியப்படுவாரல்லர் என்ற உண்மையும் கூறப்பட்டனவாயின. "காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே" என்ற தேவார வாக்கியம் இக்கருத்தினையே கூறுவதாகும். கண்ணுளார்போலக் கரந்துநிற்பர் - பேரின்பத்துறையில் கண் = அறிவு கண் உள்ளார் - உயிரினது தூல அறிவுக்குள் சூக்கும உயிராய் வேறறக்கலந்து இருப்பவராகி. வினைமுற்று வினையெச்சப் பொருளில் வந்தது. போல - அசைநிலை. சிவபெருமான் உயிரினது அறிவுக்குள் அறிவாய் வேறறக் கலந்திருத்தலினுல் அவர் உயிர் அறிவால் அறியப்படுவோர் அல்லர் என்பது கூறப்பட்டது. சிவபெருமான் உயிர் அறிவால் (பசுஞானத்தால்) அறியப்படுவார் அல்லர் ஆதலின், 'கரந்து நிற்பர்' என்றார். சிற்றின்பத்துறையில் தலைவன் தலைவியினுடைய நினைப்பினுள்ளாராய் அவள் உள்ளத்தைவிட்டு நீங்காதிருந்தாலும் அவளுக்கு மறைவாய்ப் பிரிந்திருக்கிறார் என்பது கூறப்பட்டது. உழிதர்கின்றார் விழிக்கின்றார், கரந்து நிற்கின்றார் என்று நிகழ்காலத்தாற் கூறற்பாலன; தெளிவு அல்லது இயல்புபற்றி உழிதர்வர், விழிப்பர், கரந்துநிற்பர் என எதிர்காலத்திற் கூறப்பட்டன. இப்பாட்டு சிவபெருமான், பக்குவமுள்ள உயிருக்கு அதன் உள்ளத்தில் நின்று அருள் செய்தலைக் கூறுகின்றது.

முற்றொருவர்போல முழுநீறாடி முளைத்திங்கள்
 சூடி முந்நூலும் பூண்டு
ஒற்றொருவர்போல உறங்குவேன்கை ஒளிவளையை
 யொன்றொன்றா எண்ணு கின்றார்
மற்றொருவ ரில்லைத்துணை யெனக்குமால்
 கொண்டாற்போல் மயங்கு வேற்குப்
புற்றரவக் கச்சார்த்துப் பூதஞ்சூழப்
 புறம்பயம்நம் மூரென்று போயினாரே. கஎ

(உரை) ஒருவர் - ஒப்பற்றவராகிய சிவபெருமான்; முழுநீறு ஆடி(உம்) - தமது திருமேனி முழுவதும் வெண்ணீறணிந்தும்; முளைத்திங்கள் சூடி(உம்) - மூன்றாம் பிறைத் திங்களைச் சடையிலே அணிந்தும்; முந்நூல் பூண்டு(உம்) - (மார்பிலே) முப்புரிகளாலாகிய பூணூல் தரித்தும்; முற்றுஒருவர் ஒற்றுப்போல - முழுவதும் ஒருவரால் அனுப்பப்பட்ட தூதர்போல; உறங்குவேன்கை ஒளிவளையை ஒன்று ஒன்றா எண்ணுகின்றார் - உறங்குகின்றவளாகிய என்னுடைய ஒளிபொருந்திய வகைவளையல்களை ஒன்று ஒன்றாகத் தள்ளி எண்ணிக்கை செய்கின்றார்; மால் கொண்டால்போல மயங்குவேன் - பித்துப்பிடித்த ஒருவர் அறிவின்றிச் செய்வதை அறியாது மயங்குதல்போல மயங்குகிறவளாகிய நான்; மற்று ஒருவர் எனக்குத் துணை இல்லை (என்று கூற) - (அப்பொழுது உம்மைத் தவிர) வேறுஒருவரும் எனக்குத் துணையில்லை என்று சொல்ல;

புற்றரவக் கச்சு ஆர்த்து - அவர் புற்றிலே யிருக்கின்ற பாம்புகளைக் கச்சாக (அரையிலே) கட்டி; பூதம் சூழ - பூதகணங்கள் தம்மைச் சூழ்ந்து செல்ல; நம் ஊர் புறம்பயம் என்று போயினார் - "நாம் இருக்கும்ஊர் திருப்புறம்பயம்" என்றுகூறிக்கொண்டு (என்னைவிட்டு நீங்கிப்) போனார்.

(விளக்கம்) அடிகள் இத்தேவாரப் பாட்டில், திரோதமலம் வயப்பட்டு வாழ்ந்து வந்த உலகவாழ்வில் நுகர்ந்த சிற்றின்பத்தினது நிலையாமையையும், சிறுமையையும் அறியலுற்று, உலகவாழ்வினை விட்டுநீங்கி,நிலையான இன்பம்அடைதற்கு வழிஉண்டோ என மயங்கி நிற்கும் சமயத்தில் சிவபெருமான் தோன்றி அருள் செய்தலை, அகப்பொருட் டுறையில் சிற்றின்பச் சுவையை அறியலுறும் பருவம் வந்துள்ள ஒரு தலைவி தனது உறக்கத்தில் நிகழ்கிற கனவிற் றன்றலைவன் தோன்றித் தன் வளையல்களை எண்ணித் தனது ஊருக்கு வரும்படிச் சொன்னார் என்று தன்பாங்கிக்குக் கூறும் கூற்றில் வைத்துக் கூறுகின்றார். "முழு நீறாடி" என்பதனுல், சிவபெருமான் உலக முழுவதையும் அழிப்புக்காலத்தில் தம்மிடத்து ஒடுக்குகிறவர் என்பதும், இயல்பாகவே பாசங்களினின்று நீங்கியதூயர் என்பதும் 'முளைத்திங்கள்சூடி' என்பதனுல் அவர் தம்மைஅடைந்தவருடைய இடர் நீக்குவர்என்பதும் 'முந்நூல்பூண்டு'என்பதனுல் தமக்கு ஒன்றும்வேண்டாதவர் என்பதும் குறிப்பிடப்பட்டன. முற்று ஒருவர் போல - 'முற்று' என்ற சொல் இரண்டாவது வரியில் வருகிற 'ஒற்று' என்ற சொல்லுக்கு அடைமொழியாகச் சேர்த்துப் பொருள் உரைக்கப்பட்டது. போல - அசை நிலை. முற்று ஒருவர் ஒற்றும் போல 'முற்றும்' என்பது மகர ஒற்றுக் கெட்டு 'முற்று'எனக் குறுகி நின்றது. முற்றும்- முழுவதும். ஒற்று - தூதன். நிகழும் செய்திகளை மறைந்து நின்று அறிந்து, தன்னை அனுப்பின முதல்வனுக்குச் சொல்லுகிறவன். (Spy) தலைவிதான் உறங்குங் காலத்து மறைவாய் நின்றுத் தன் வளையல்களைத் தலைவன் எண்ணிப் பார்த்ததனுல் அவரைத் தலைவர் என்று கூருது, 'முற்றிலும் ஒரு தூதன் போல வந்தார்' என்று கூறினார். சிற்றின்பத்துறையில் உறங்குதல் என்பது தலைவி தலைவனுல் அடையும் இன்பத்தை மறந்து தூங்குதல். உறங்குவேன் கை ஒளிவளையை ஒன்று ஒன்றாய் எண்ணுகின்றார் - உறங்குதல் - பேரின்பத் துறையில் திரோத மலம் காரணமாக உலகவாழ்வில் மயங்கி இறைவனுல் அடையப்பெறும் பேரின்பத்தை அறியாதிருத்தல். உறங்குவேன் - தெரிநிலை ஒருமைத்தன்மை எதிர்கால வினையாலணையும் பெயர். 'உறங்கினேன்' என இறந்த காலத்தாற் கூறற்பாலது. இயல்பு பற்றி எதிர்காலத்தாற் கூறப்பட்டது. 'வளை' என்பது உயிரை வளைந்திருக்கிற உலக வாழ்வுப் பற்றுக்களை உள்ளுறைப் பொருளாகக் குறிக்கும். இப்பற்றுக்கள் திரோத மலத்தால் உண்டாகியவை. அம்மலம் திருவருட்சத்தியால் இயக்கப்படுதலால் 'ஒளிவளை' என்றார். சிற்றின்பத் துறையில் 'ஒளிவளை' என்பது பொன்னலாகிய வளையலை வளையைக் குறிக்கும். ஒன்று ஒன்றாய் எண்ணுதல்-என்பது உள்ளுறைப் பொருளாக திரோத மலத்தினுலுண்டாகும் பற்றுக்களை ஒன்று ஒன்றாய் சோதனை செய்து அவைகள் ஒவ்வொன்றும் எவ்வளவு உயிரை விட்டு நீங்கி யிருக்கின்றன என்று ஆராய்ந்து பார்த்தல் ஆகும். இது, தீக்கையில் அத்துவ சோதனை என்று கூறப்படும். உயிர் பேரின்பச் சுவை அறியும் தகுதி அடைதற்கு உலக வாழ்வுப் பற்றுக்கள் முழுவதும் நீங்குதல் வேண்டப்படுதலின், அப்பற்றுக்கள் உயிரினை விட்டு நீங்கினவர் என்று சிவபெருமான் பார்த்தார் என்பார், 'ஒன்றொன்றாய் எண்ணுகின்றார்' என்றார். "பாதம் பணிவார் தம் பல் பிறவி - ஆய்ந்தாய்ந் தறுப்பாய்" என்று இக்கருத்தைத் திருநாவுக்கரசு அடிகள் திருச்சத்தி முற்றத் திரு விருத்தம் 2 வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. ௬-வது அடியில் 'போயினார்' என்று சொன்னதற்கேற்ப,'உறங்கினேன்' என்றிருத்தற்பாலது. 'உறங்குவேன்' என எதிர்காலத்தாற் கூறினார், இது காலவழுவமைதி. மால்கொண்டால் போலமயங்குவேன் - மால் - பித்து. பைத்தியம் கொண்டால்+போல. கொண்டாற்போல மயங்குவேன்+கு - மயங்குவேன். தெரிநிலை ஒருமைத் தன்மை

எதிர்கால வினையாலணையும் பெயர் 'மயங்கினேன்' எனற்பாலது 'மயங்கினேன்' என நின்றது காலவழு வமைதி. மயங்குதல் - இன்னது செய்தல்வேண்டும் என்று அறியாது திகைத்தல். மயங்குதல் - சிற்றின்பத்துறையில் காமாசமறியவந்த தலைவி தலைவனால் அடையப்பெறும் சிற்றின்பத்தை அடைய வழிதெரியாது மயங்குதல்; பேரின்பத்துறையில் பேரின்பச் சுவை அறியும் பக்குவம் வந்த உயிர் உலகவாழ்வு நிலையிலிருந்து தப்பிப் பேரின்பத்தை அடைதற்கு வழி தெரியாது மயங்குதல். நம் ஊர் புறம்பயம் என்று போயினார் - நம் ஊர் புறம்பயம் என்பது சிற்றின்பத்துறையில் தலைவன், சிற்றின்பமடைய வழி அறியாது மயங்கிக்கொண்டிருக்கிற தலைவிக்குத் தமது ஊர் திருப்புறம்பயம் என்று கூறி அந்த ஊருக்கு வரும்படி தெரிவித்தல். "பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்" என்ற தேவார வசனத்தை ஒத்துநோக்குக; பேரின்பத் துறையில் இறைவன் பேரின்பமடைய வழி அறியாது மயங்கிக் கொண்டிருக்கிற உயிருக்குத் தாம் உயிர்களுக்கு அருள்செய்தற் பொருட்டுத் திருக்கோயில் கொண்டருளியிருக்கின்ற திருப்புறம்பயத்துக்கு வந்து தம்மைத் தமது வியாபக அறிவு வேட்கை செயல்களில் அடங்கி நின்று வழிபடல் வேண்டும் என்று தெரிவித்தல். சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தமக்கு அடிமையாகப் பணிசெய்தல் வேண்டுமென்று அவரிடம் கூறி ஆவண ஓலைகாட்டி மெய்ப்பித்த பொழுது 'நாமிருக்குமிடம் அருட்டுறை' என்று திருவெண்ணெய் நல்லூர்க்கோயிலுக்குட் புகுந்து வழி காட்டினதை நோக்குக. 'புறம்பயம்' என்ற சொற்றொடருக்கு உள்ளுறைப் பொருளாக, முன் "நஞ்சடைந்த கண்டத்தர்" என்ற 35-வது பாட்டின் கீழ் நான் உரைத்த கருத்துக்களைக் கொள்க. "அஞ்சலென்றடித் தொண்டனேற்கருள் நல்கினாய்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பாண்டிக் கொடுமுடித் தேவாரம் 5-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. பேரின்பம் நுகருமிடம் அச்சமில்லாத இடம் ஆதலின் 'புறம்பயம்' என்றார். சிவபெருமானுடைய திருவுருவங்களில் வலது கைகளில் ஒருகை அபயக்கையாயிருத்தலை நோக்குக. ஏ - அசை. பின்னே வருகிற 38-வது பாட்டில் 'நின்றார்' என்று கூறியதுபோல அன்றிப் 'போயினார்' என்று இப்பாட்டிற் கூறப்படுதலால், சிவபெருமான் உயிரினுடைய பக்குவத்தை ஆய்ந்து பார்த்துத் தாம் அதற்கு அருட்பார்வை செய்து மலம் நீக்குதற்குத் தகுதி உண்டாகவில்லை என்று அறிந்து, இன்னம் தம்மை அறிதல்வேண்டும் என்று அறிவித்துவிட்டுப் 'போயினார்' என்பது குறிப்பிடப்பட்டது. பாட்டில் சிவபெருமான் வந்தார், சோதனை செய்தார், போயினார் எனக் கூறப்பட்டனவெல்லாம் சிற்றறிவுடைய நம்போல்வார் அறிதற்கு உருவகமாய்க் கூறப்பட்டுள்ளன. அவர் ஒவ்வொரு உயிர்க்கும் அதனதன் பக்குவம் அறிந்து அறிந்து அருள் செய்துகொண்டிருக்கிறார் என்பது கருத்து.

வெள்ளநீர்ச் சடையனார்தாம் வினவுவார் போல வந்தென்
உள்ளமே புகுந்துநின்றார்க் குறங்குநான் புடைகள் போந்து
கள்ளரோ புகுந்தீரென்னக் கலந்துதான் நோக்கி நக்கு
வெள்ளரோமென்றுநின்றார் விளங்கிளம் பிறையனாரே. ௩௮

(உரை) வெள்ளம்நீர்ச் சடையனார் - கங்கையாற்றுப் பெருக்கை அடக்கி அதனை ஒருதுளியாகச் சடையில் வைத்தவரும்; விளங்கு இளம்பிறையனார் - ஒளிவிளங்கும் மூன்றாம்பிறைச் சந்திரனை அணிந்தவரும் ஆகிய சிவபெருமான்; வினவுவார் போல வந்து - (உறங்குகின்ற என்னிடம்) கேள்விகேட்கிற குறிப்புடனே வந்து; என் உள்ளமே புகுந்து நின்றார் - (நான் அறியும்படி) எனது உள்ளத்தில் வேறாக விளங்கி நின்றார்; உறங்கும் நான் - உறங்கிக்கொண்டிருக்கின்ற நான்; புடைகள் போந்து - (அவர்) பக்கத்திலே போய்; புகுந்தீர் கள்ளரோ என்ன - எனது உள்ளத்தினுள்ளே நான் அறியாது புகுந்தவராகிய நீர் கள்ளரோ என்று அவரைக் கேட்க; தாம் - சிவபெருமான்; நோக்கி - (எப்பொழுதும் எனது உள்ளத்தில் உறைகின்றவர் என்றுநான் அறிய எனது மலம் நீங்கும் வண்ணம் தமது அருட்பார்வையால்) என்னைப் பார்த்து; கலந்து - (முன்னே அவரை எனக்கு வேறாக நின்றார் என்று கருதிய என்னை இப்பொழுது அவரோடு அத்துவிதமாய்க்) கலக்கும்படி செய்து; நக்கு - (அவ்வாறு நான் அவருடன் அத்துவிதமாய்க் கலந்ததற்காக அகமகிழ்ச்சியினால்) புன்முறுவல் செய்து; வெள்ளரோம் என்று நின்றார் - (நாம்முன் நீ அறியாது கூறியபடி கள்ளர் அல்ல; இப்பொழுது நீ அறிகிறபடி உனது உள்ளத்தில் எப்பொழுதும்) கள்ளமில்லாமல் (மெய்ம்மையாக) இருக்கிறவர் என்று கூறிக்கொண்டு நின்றார்.

(விளக்கம்) 'வெள்ளம்நீர்ச் சடையனார்' என்பதனால் சிவபெருமான் பேராற்றலுடையவர் என்பதும், 'இளம்பிறையனார்' என்பதனால் சிவபெருமான் தம்மை அடைந்தவர்களுடைய இடரைத் தீர்ப்பவர் என்பதும் குறிப்பிடப்பட்டன. 'இளம் பிறையனாரே' என்பதிலுள்ள ஏ - அசை. வினவுவார்போல வந்து - கேள்விகேட்கிற குறிப்பு முகத்திலே விளங்கியது என்பார், 'வினவுவார்போல' என்று கூறினார். கேள்வி கேட்கிறதற்கு வேறாகநிற்றல் வேண்டப்படுதலால் பல 'வேறாகநின்று' என்று பதவுரை செய்யப்பட்டது. "நமது 'அருமைமகனே! நீமலப்பற்று நீங்கி நம்மைச்சேர்ந்து பேரின்பம் அடையும் தகுதி பெறுதற்கு நாம் உனக்கு உலகவாழ்வும் அதற்கு வேண்டப்படும் தனுகரண புவனபோகங்களும் கொடுத்தோமே, அவைகளை நமது கருத்து நிறைவேறும்படி பயன்படுத்திக் கொண்டாயா?' என்பதுகேள்வி. 'என் உள்ளமே புகுந்து நின்றார்' - 'உள்ளமே' என்பதிலுள்ள ஏகாரம் தேற்றம். 'புகுதல்' என்பதுஇங்கே விளங்கிநிற்றல், சிவபெருமான் எப்பொழுதும் எல்லா உயிர்களுடைய உள்ளத்திலும் இருப்பவர் ஆதலின், உள்ளத்தில் ஒளி உருவாய் விளங்கியது உறுதியாய்த் தெரிந்தது என்பார், 'உள்ளமே புகுந்து நின்றார்' என்றார். உள்ளத்திலே விளங்கியது மறையாமல் விளங்கியவாறே 'நிலைபெற்றுநின்றார்' என்பார் 'நின்றார்' எனக் கூறினார். 'நின்றார்க்கு' என்பதிலுள்ள கு - சாரியை. "இரந்திரந் துருக என்மனத்துள்ளே எழுகின்ற சோதியே" எனவும், "சோதியாய்த் தோன்றும் உருவமே" எனவும் மாணிக்கவாசக அடிகள் கூறியிருத்தல் காண்க. உறங்கும்நான் - பேரின்பத்துறையில் உறங்குதல், என்பது உள்ளுறைப்பொருளாகத் திரோத மலத்தின் வயப்பட்டு சிவபெருமானை அறியாதிருத்தலைக் குறிக்கின்றது. சிற்றின்பத் துறையில் தலைவி தலைவனை அறியாதிருத்தலைக் குறிக்கின்றது. புடைகள் போந்து - புடை - பக்கம். கள் - அசை. சிவபெருமான் உயிரினது உள்ளத்தில் வேறாய் விளங்கி நிற்றலால் "உயிர் புடைபோந்து" என்று கூறப்பட்டது. புகுந்தீர் கள்ளரோ என்ன - புகுந்தீர் - முன்னிலைத் தெரிநிலை இறந்தகால வினையா லணையும் பெயர். சிவபெருமான் இதுகாறும் உயிரினுடைய உள்ளத்திலே விளங்காமல் மறைந்து நின்று, திரோத மலம் நீங்கின பருவம் வந்த இப்பொழுது ஒளிஉருவில் விளங்கி நின்றுள்ளதை அறிந்த உயிர் புதிதாய் விளங்கினவரைக் 'கள்ளர்' என மயங்கி அறிந்தது என்பார் 'கள்ளரோ' என்றார். 'கள்ளரோ' என்பதிலுள்ள ஓகாரம் வினாப்பொருளைத் தந்துநின்றது. நோக்கி - நோக்கம் - அருட்பார்வை - சிவபெருமான் தாம் உயிருக்கு இன்ன தொடர்புடையவர் என்று அறியாதிருந்த உயிரை அத்தொடர்பை அறியச் செய்ய அதன் மலம் நீங்கும் வண்ணம் அருட்பார்வையாற் பார்த்தல், இது, நயன தீக்கை என்று கூறப்படும். முதலாவது வரியிலுள்ள 'தாம்' என்ற சொல் மூன்றாம் வரியில் வருகின்ற 'நோக்கி' என்ற வினைக்கு எழுவாயாகவும், மூன்றாவது வரியிலுள்ள 'தான்' அசை நிலையாகவும் கொள்ளப்பட்டன. கலந்து - சிவபெருமான் உயிரினிடத்து அருட்பார்வை செய்து அதனோடு தாம் எப்பொழுதும் அத்துவிதமாய் (இரண்டற)க் கலந்து நிற்றலை அது அறியும்படி செய்தலே இங்கே கூறப்பட்ட கலத்தல் ஆகும். முன் கலவாது, இப்பொழுது கலந்தது உயிரோ அன்றிச் சிவபெருமான் ஆ[illegible] நிலையில் சிவ

பெருமான் உயிரினோடு அத்துவிதமாய்க் கலந்து நின்ற முறைமை போல, திரோதமலம் நீங்கின அருள் நிலையில் உயிர் சிவபெருமானோடு அத்துவிதமாய் நிற்கின்றது என்ற உண்மை (கலந்து) என்பதனால் இங்கே கூறப்பட்டது. இவ்வாறு உயிர் சிவபெருமானோடு அத்துவிதமாய்க் கலந்து ஒன்றாகும் நிலை சிவயோகம் ஆகும். சிவயோகத்தின் பின் நிகழும் சிவபோகம் நிகழ்ந்ததாக இத்தேவாரப் பாட்டு கூறவில்லை. நோக்குதலின் பின் கலப்பு நிகழ்தல் முறைமையாதலின், பாட்டில் 'கலந்து நோக்கி' என்றிருப்பதை நோக்கிக் கலந்து என மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. நக்கு - நகுதல் - புன்முறுவல் செய்தல்; சிறு நகை செய்தல். அகமகிழ்ச்சி காரணமாக முகம் மலர்ந்து சிறு நகை செய்தல். ஒருயிர் திரோத மலத்தினின்று நீங்கித் தமது அருளை அறிந்து, தம்மோடு கலந்ததற்காக சிவபெருமான் அகம் மகிழ்ந்து முகம் மலர்ந்து சிறு நகை செய்தார் என்பது 'நக்கு' என்ற சொல்லாற் கூறப்பட்டது. வெள்ள ரோம் என்று நின்றார் - வெள்ளர் - கள்ளமில்லாதவர் "வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை" என்னும் ஔவையார் முதுமொழியில், 'வெள்ளை' என்பது கள்ளம் இன்மையைக் குறிக்கின்றது என்பது நன்கு விளங்குகின்றது. திருஞான சம்பந்த அடிகளுடைய திருக்கானூர்த் தேவாரம் ௧௦-வது பாட்டில் "தாமோர் கள்வர் வெள்ளர் போல" என்று வரும் சொற்றொடரில் 'வெள்ளர்' என்ற சொல்லுக்கு இப்பொருள் தெளிவாய் விளங்குதல் காண்க. ஓம் - தன்மைப் பன்மை விகுதி; உளப்பாட்டுத் தன்மைப் பன்மை விகுதி அன்று. தன்மைப் பன்மை சிவபெருமான் உலகிற்கு முழுமுதற்றலைவர் என்பதைக் குறிக்கின்றது. 'உளோம் போகீர்' என்று சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருவெண்பாக்கத்தில் கூறி அருளினமை காண்க. நின்றார் - போயினார் என்று முன்னைய 37-வது பாட்டிற் கூறியது போலக் கூறாமல் இப்பாட்டில் 'நின்றார்' எனக் கூறப்படுதலினால் உயிர் சிவபெருமானுடைய அருட்பார்வையால் மல நீக்கம் அடைந்தபின் சிவபெருமானொடு கலந்திருக்கும் சிவயோக நிலையில் நிலைத்திருந்தது என்பது குறிப்பிடப்பட்டது. இப்பாட்டில் (ஒளி உருவில்) 'உள்ளமே புகுந்து நின்றார்' என்பதனால் சிவரூபம் என்னும் தமது சத்துத் தன்மையையும், 'நோக்க' என்பதனால் சிவ தரிசனம் என்னும் தமது சித்துத் தன்மையையும், 'கலந்து' என்பதனால் தமது ஆனந்தத்தன்மை விளங்குகின்ற சிவயோக நிலையையும் சிவபெருமான் உயிருக்கு விளங்கும்படி செய்தார் என்பது உய்த்துணர்க. திருநாவுக்கரசு அடிகள் இந்தத் தேவாரப்பாட்டில் திரோத மலம் நீங்கிப் பேரின்பச் சுவை உணரும் பருவமடைந்த ஒருயிரிடத்தில் சிவபெருமான் வந்து தமது அருட்கண்ணால் நோக்கி மல நீக்கம் செய்து சிவயோக நிலையை அடையச் செய்தான் என்ற உண்மையைச் சிற்றின்பச் சுவையை உணரும் பருவமடைந்த ஒரு தலைவி, தன்னிடம் உறங்கும்பொழுது முன் ஊழினாற் காட்சிப்பட்ட தனது தலைவன் வந்து அவனுடைய உருவ நலமும் பண்பு நலமும் காட்டித் தன்னோடு கலந்தான் என்ற செய்தியைத் தன் பாங்கிக்குச் சொன்னாள் என்னும் அகப்பொருட்துறையில் வைத்துக் கூறினார்.

சரண மாம்படியார் பிறரி யாவரோ
கரணந் தீர்த்துயிர் கையி லிகழ்ந்தபின்
மரண மெய்திய பின்னவை நீக்குவான்
அரண மூவெயி லெய்தவ னல்லனே. ௩௯

(உரை) உயிர் - உயிரானது; 'கரணம் தீர்த்து கையில் இகழ்ந்தபின்' தனது கருவி அறிவைவிட்டு (அக்கருவி அறிவின் வழி செய்யப்படுகின்ற) செயலிலும் மறத்தலைச் செய்த பின்னும்; மரணம் எய்திய பின் - எல்லா அறிவுக் கருவிகளும் செயற் கருவிகளும் தன்னிடம் ஒடுங்கிய பின்னும்; நவை நீக்குவான் - உயிரினுடைய 'நான்' என்னும் அகப்பற்று 'எனது' என்னும் புறப்பற்று ஆகிய குற்றங்களை உயிரினைவிட்டு நீக்குகின்றவன்; அரணம் மூ எயில் எய்தவன் அல்லனே - கோட்டைகளாற் சூழப்பட்ட முப்புரங்களையும் வில்லினால் எய்து அழித்தவனாகிய சிவபெருமான் அல்லவா? (சிவபெருமானே என்றபடி); ஆதலின் சரணம் ஆம்படியார் - உயிர்கள் முடிவில் பேரின்பம் அடைதற்குச் சேரும் புகலிடமாயுள்ளவர்; பிறர் யாவரோ - அச்சிவபெருமானை யல்லது வேறு யாருமில்லை; ஆதலால் மாந்தர்களே சிவபெருமானை அடைந்து வழிபடுங்கள் என்பது குறிப்பெச்சம். அவ்வழிபாடு அடுத்த 40-வது தேவாரப்பாட்டிற் கூறப்படுகிறது.

(விளக்கம்) கரணம் தீர்த்து - கரணம் என்பது கருவி. அது இங்கே ஆகுபெயராய்க் கருவி அறிவைக் குறிக்கின்றது. ஐம்புலன்கள் அந்தக் கரணங்களால் அறியும் அறிவு. தீர்த்தல் - விடுதல். "தீர்தலும் தீர்த்தலும் விடற் பொருட்டாகும்" என்பது தொல்காப்பியச் சூத்திரம். கையில் இகழ்ந்தபின் - கை என்பது இங்கே ஆகுபெயராய்க் கைகளினாலும் பிற புற உறுப்புகளாலும் செய்யப்படும் செயலைக் குறிக்கின்றது. கை என்னும் சொல் திருக்குறள் 1036-வது பாட்டு "உழவினார் கைம்மடங்கின்" என்பதில் செயல் என்ற பொருளில் வழங்கப்பட்டிருத்தல் காண்க. இகழ்தல் - மறத்தல். திருக்குறள் 538-வது குறளில் வருகிற 'இகழ்ந்தார்' என்ற சொல்லுக்கு 'மறந்தவர்' என்று பரிமேலழகர் உரை கூறியிருத்தல் காண்க. கருவி அறிவை விட்டபின்னும் அவ்வறிவின் வழி நிகழும் செயல் பழைய வாசனையால் நிகழும் ஆதலின், அடிகள் 'கரணந் தீர்த்து' என்று கூறியபின் "கையிலிகழாதபின்" என்றும் கூறினார். "கற்றவா உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் நமச்சிவாயப் பதிகத்தில் கூறியருளினர். கரணம் தீர்த்தலும் கையிலிகழ்தலும் பின்வருகிற மரணம் எய்தலைவிட ஒன்றற்கொன்று மிக நெருங்கிய தொடர்புடையன ஆதலின், அடிகள் அவை இரண்டினையும் ஒன்று சேர்த்து அவைகளுக்குப் பின்னர் 'பின்' என்ற அடைமொழி கூறினார். மரணம் எய்தியபின் 'மரணம்' என்பது உயிர் பருவுடலிலிருந்து நுண்ணுடலில் ஒடுங்குதல். அது, இங்கே 'ஒடுக்கம்' என்ற பொருளில் வந்தது. உயிரினிடத்தில் எல்லாக் கருவிகளும் ஒடுங்குதல் இங்கே மரணம் என்று கூறப்பட்டது. சிவஞான சித்தியார் ஒன்பதாஞ் சூத்திரம் "கரணங்கள் கெடவிருக்கை" என்ற இரண்டாவது பாட்டில் 'மரணம்' என்ற சொல்லுக்குப் பத்தாவது அவத்தை என்று சிவஞான சுவாமிகள் பொருள் கூறியருளினார்கள். அதேபொருள்தான் இந்த இடத்திலும். கேவலம் சாக்கிர அவத்தையிலிருந்து எண்ணினால் சகலத்தில் துரியாதீத அவத்தைப் பத்தாவது அவத்தையாகின்றது. இந்த அவத்தையில் உயிர் கருவிக் கூட்டத்திலிருந்து நீங்கித் தனித்து நிற்கின்றது. இந்த அவத்தையில் கருவிக் கூட்டம் எல்லாம் ஒடுங்கி உயிர்மாத்திரம் தனித்து நிற்கிற நிலை. கரணம் தீர்த்தல், கையில் இகழ்தல், மரணம் எய்தல் என்ற மூன்று நிலைகள் முறையே ஒன்றினொன்று அதிகமாய் இப்பாட்டில் கூறப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று நிலைகளையும் முறையே சிவசமவாத சைவர், பாடாணவாத சைவர், பேதவாத சைவர் என்ற மூன்று அகச்சமயவாதிகள் கூறுகின்றார்கள். இந்த மூன்று அகச்சமய வாதிகளும் சுத்தாத்துவித சைவரைப்போல பதி பசு பாசம் என்ற முப்பொருள்களையும் ஒப்புக்கொண்டு உயிர், வீட்டினை அடையுந் தன்மையில் அவரினின்றும் வேறுபடுகிறார்கள். உயிர் சிவத்தினைக் கூடி வீட்டின்பம் அடைதல் வேண்டியதில்லை என்றகொள்கையில் மூன்று வாதிகளும் ஒத்தகொள்கை யுடையவர்களா யிருக்கிறார்கள். இந்த ஒத்த கொள்கையை அவர்கள் மூவரும் கொள்ளுதலிலும் அவர்களுக்குள் சிறிது பேதமிருக்கின்றது. சுத்தாத்துவித சைவசமயத்தின்படி வெவ்வேறு வாதிகளுடைய கொள்கையானது அவரவருடைய அறிவுநிலையைப் பொறுத்து உள்ளது. சுருங்கக் கூறின், சிவசமவாதிகள், உயிர் கருவி அறிவினை நீங்கி உலகத்தை அசத்து என்று கண்டவிடத்து உலகத்துக்கு மேற்பட்டு நான் சிவம்எனத் தோன்றும் உயிர் அறிவால் பதியைக் காண்டலே முத்தியாகும் என்பர் பாடாணவாத சைவர். 'நான்சிவம்' என நிகழும் ஞான

மன்றி உயிர்கருவி அறிவைக் கிழாகணாடி சுட்டிக்காணும் காட்சியும் சுகதுக்க அநுபவ உணர்ச்சியு மில்லாமல் கற்போல இருக்கும் நிலையை முத்தி என்பர் பேதவாத சைவர். உயிர் தன்மாட்டு ஒருவனது நிழல், உச்சிப்பகற் பொழுதில் அவன் அடிக்குள் அடங்கி நிற்றல்போலக் கருவிக் கூட்டமெல்லாம் வந்து ஒடுங்கியபொழுது பக்குவம் அடைந்து சிவனுடைய அருளால் அவன் திருவடியைக் கூடாமல், நிரந்தரமாய் நின்று முத்தியை அடையும் என்பர். (விரிவைச் சங்கற்ப நிராகரணம் நூலிற் பார்க்க) இந்த மூன்று வாதிகளும் உயிர் பாசஞானம் (கருவி அறிவு) நீங்கியபின் பதிஞானத்தால் பதியைக் கூடுதல் வேண்டாது பசுஞானத்தால் முத்தி அடைதல் கூடும் என்று கூறுகிறவர்கள். இவர்கள் யான், எனது என்னும் செருக்கு நீங்காதவர்கள். வேதாந்திகள் என்னும் ஏகான்ம வாதிகளும் ''நான் பிரமம்'' என்னும் பசு ஞானம் உடையவர்களாயினும் பசு பாசங்களை ஒப்புக்கொள்ளாதவர்கள் ஆதலின், அவர்கள் அகப்புறச் சமயத்தார் ஆகக் கொள்ளப்படுவர். உயிரினிடம் கருவிக் கூட்டமெல்லாம் ஒடுங்கி நின்ற நிலை முடிவான பசு ஞான நிலையாதலின் அதனை அடிகள் கடைசியாகக் கூறி அருளினர். இந்த நிலைக்குப் பின் நிகழ்வன மேற் கூறிய மூன்று வாதிகளும் அறியாமலிருக்கிற நின்மல சாக்கிரம் முதல் நின்மலத் துரியாதீதம் வரை உள்ள நிலைகள். நவை-பின்+நவை=பின்னை நவை - குற்றம், 'யான்' என்ற அகப்பற்றினலும் 'எனது' என்ற புறப்பற்றினலும் உண்டாகும் குற்றம்.. நீக்குவான் அரணம்மூ எயில் எய்தவன் அல்லனே - உயிர் பசுஞானத்துக்கு உரிய யான் எனது என்ற குற்றங்களினின்று நீங்கிப் பதி ஞானத்தாற் பதியோடு அத்துவிதமாய்ச் சேர்ந்து முத்தி அடைதல் கூடுமே அன்றி மேலே கூறிய மூன்று நிலைகளிலு முள்ள பசு ஞானமுடையவர்கள் கூறுகிறபடி முத்தி அடைதல் முடியாது என்பார், அடிகள் ''நவை நீக்குவான் அரண்மூ வெயிலெய்தவனல்லனே'' என்றார். ''யானெனத தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க் - குயர்ந்த வுலகம் புகும்'' என்று திருவள்ளுவ நாயனர் கூறி யருளினமை காண்க. அல்லனே என்பதிலுள்ள ஏகாரம் வினப் பொருளில் ''நவை நீக்குவான் அவனே யாவன்'' என்னும் பொருள்பட நின்றது. சரணம் ஆம்படியார் - சரணம் - புகலிடம்; சேரும் முடிவிடம் (Goal) சிவபெருமான் மல்லை ஞாலத்து வாழு முயிர்க்கெலா மெல்லையான பிராணுயிருக்கின்றன் என்ற உண்மை கூறப்பட்டது. படியார் - தன்மை உடையவர்; அருட் பண்புடையவர்; தமக்கென ஒன்றும் வேண்டாது உயிர்களின் பொருட்டுப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருள் செய்யும் கருணையாளர். ஆகும் என்ற ஆக்க வினை இடையிலுள்ள 'கு' கெட்டு 'ஆம்' என நின்றது. பிறர் யாவர் - பிறர்+யாவர் - பிறரியாவர், இகரம் குற்றியலிகரம். யாவரோ என்பதிலுள்ள ஓகாரம் பிறர் யாவரும் இல்லர் என்ற எதிர்மறைப் பொருளில் வந்தது. சிவபெருமான் ஒருவரே சரணமாம்படியார் என்பது பொருள். திருநாவுக்கரசு அடிகள் இந்தத் திருக்குறுந் தொகைத் தேவாரப் பாட்டில் ''இருதிறனறிவுள இரண்டலா ஆன்மா'' அசத்தினைச் சார்ந்து அசத்தின் வண்ணமாய் அசத்தினை அறிந்து அசத்தின் மேலாய் அடைந்த பசுஞான நிலைக்குப் பின் சத்தினைச் சார்ந்து சத்தின் வண்ணமாய்ச் சத்தினுள் அடங்கி சத்தினை அறிந்து அடைகிற பதிஞானத்தால் சிவபெருமானேடு (சத்தினேடு) அத்துவிதமாய்க் கலந்து பேரின்பம் அடைதல் வேண்டுமே அன்றிப் பசுஞான நிலையில் பேரின்பம் அடைதல் முடியாது என்ற உண்மையைக் கூறியருளினர்.

மார்கழி மாதம் திருவெம்பாவை

[மட்டுவில் - சி. சுப்பிரமணிய ஐயர்]

மிருகசீர்ஷ நக்ஷத்திரமும் பௌர்ணிமையும் கூடும் மாதம் "மார்கசீர்ஷ" என்று சொல்லப்படும். இதுவே மார்கழி மாதமென்று வழங்குகிறது.

ஒரு சூரிய உதயம்முதல் மற்றொரு உதயம் வரை செல்லுகின்ற நேரமானது மனிதர்களுக்கு ஒரு நாள் ஆகும். ஒரு மகர சங்கராந்தி தொடங்கி மற்றொரு மகர சங்கராந்தி வரையிற் செல்லும் நாட்கள் மனிதர்களுக்கு ஒரு வருடமாகும். மனிதர்களின் ஒரு வருடகாலம் தேவர்களுக்கு இராப் பகலோடுகூடிய ஒரு நாளாகும். இதனுள் உத்தராயணமாகிய தை மாசத் தொடக்கம் ஆனி யிறுதியாகவுள்ள ஆறு மாசங்களும் தேவர்களுக்குப் பகற்கால மென்றும், தக்ஷிணாயன காலமாகிய ஆடி தொடக்கம் மார்கழி யிறுதியாக உள்ள ஆறு மாதங்களும் அவர்களுக்கு இராக்கால மென்றும் சொல்லப்படும்.

ஒவ்வொரு மாதமும் ஐயைந்து நாழிகையாகச் செல்லுகின்ற அறுபது நாழிகையுடைய தேவதினத்தில் உதயாத் பூர்வம் ஐந்து நாழிகையாகப் பதினொரு முகூர்த்தங்களுஞ் சென்று பன்னிரண்டாவது முகூர்த்தமாகிய மார்கழி மாதமே தேவர்களுக்கு (ப்ராஹ்மீ முகூர்த்தம்) புலரிக்காலமாகிறது.

தேவர்கள் இம்முகூர்த்தத்திலே பரமேசுவரனைத் தியானித்துத் துதித்து நித்திய கருமங்களை நடாத்துகின்றார்கள். இக்காலத்திலே மனிதர்களும் "வைகறைத் துயிலெழு" என்று நமது மூதாட்டியார் கூறியபடி நித்திரை விட்டெழுந்து, ஸ்நானம், சந்தியா வந்தனம், ஆலய வழிபாடு என்னும் இவைகளைச் செய்தால் தேவர்கட்குப் பிரீதி உண்டாகுமென்று மகரிஷிகள் கற்பித்திருக்கின்றனர். பன்னிரண்டு மாதங்களிலும் சிறப்புற்றது மார்கழி மாதமாகும்.

மார்கழி மாதத் திருவாதிரை நாளுக்கு முந்திய ஒன்பது நாள் தொடக்கம், திருவாதிரை முடிவுள்ள பத்து நாளும் ஆலயங்களில் புலரிக் காலப் பூசை முடிவில், தேவாலயங்களிலும், மடாலயங்களிலும் திருவாசகத்திலுள்ள திருவெம்பாவை ஓதப்படுகின்றது. சைவ சமய குரவருள் ஒருவராகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் தியானிக்க முத்தி தருவதாகிய திருவண்ணாமலைக் கெழுந்தருளிய போது அருணாசலேசுவரர், குரு முகூர்த்தமாகத் தரிசனங்கொடுக்கத் தரிசித்துக்கொண்டு அங்கே வாசஞ் செய்கின்ற காலத்தில் ஆங்குள்ள மாதர்கள் தாங்கள் தடாகத்தில் புனலாடும் போது பயனற்ற வீண்பாக்கள் பாடுவதைக் கண்டு, அவர்கள் மீது கருணைகொண்டு, அம்மாதர்கள் ஓதிப் புனலாடும் பொருட்டுத் திருவெம்பாவை யென்னும் இருபது திருவாசகங்களைப்பாடி யருளினர். இத்திருவெம்பாவை திருவருட் சக்தியை விதந்து பாடப்பட்டதாகும். ஆன்மா மலமாகிய இருளில் கிடந்து

துஞ்சாது பரிபாகத்தைப் பெறும் பொருட்டுத் திருவருட் பிரவாகமாகிய தடாகத்துள் மூழ்கும்படி அதனை யெழுப்புவதே திருவெம்பாவையின் தத்துவார்த்தமாகும்.

"மல விருளுற் றுறங்காமல் பன்னுபரி பாக வருட்
செலமுழுக வருகவெனச் செப்பல்திரு வெம்பாவை"

எனவருந் திருப்பெருந் துறைப்புராணச் செய்யுட்பாகத்தாலும் இது நன்கு அறியத்தக்கதாம். மேலும் மலத்தைக் கழுவுவதே ஸ்நானஞ் செய்தலென்றும் திருவருட் பெருக்கே தடாகமென்றும் மாணிக்கவாசகப் பெருமான்,

"தங்கள் மலங் கழுவுவார் வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன் றிசைந்த பொங்குமடு"

என் எடுத்துக் காட்டியிருப்பதாலும் இது இனிது விளங்கும்.

நடராஜப் பெருமான் சிற்சபையை விட்டெழுந் தருளுவது படைத்தலாகும் (சிருஷ்டி) இரட்சா பந்தனம் தரிப்பது காத்தலாகும் (ஸ்திதி) கிருஷ்ணகந்தம் தரிப்பது அழித்தலாகும் (சங்காரம்) வெள்ளை சாத்துவது மறைத்தலாகும் (திரோபவம்) திருவிழாக் கொண்டாடுவது அருளலாகும் (அநுக்கிரகம்). நானென்று ஆணவங்கொண்ட அவுணரைச் சங்காரம்செய்து அவர்கள் உடம்பின் கரியசாம்பரைத் திலதமாக்கித் தரித்துக்கொண்ட பாவனையாகக் கிருஷ்ண கந்தஞ் சாத்தப்படுகிறது. சங்கார காலத்தில் அவரது திருமேனி அதிக உக்கிரமாக இருந்தபடியால் அது தணியும்படி தேவர்கள் பரமசிவனது திருமேனியை வெள்ளை வஸ்திரத்தினாலும் வெண்ணிறப் புஷ்பங்களாலும் மறைத்தார்கள். அப்பாவனையாகவே வெள்ளை சாத்தப் படுகிறது.

சிதம்பரம் என்னுஞ் சொல் ஞானாகாசம் என்று பொருள்படும். சிவபெருமானுக்கு ஞானமே திருமேனி யாதலாலும் ஞானிகளின் உள்ளத்தின் பேரொளி சிவபெருமானே யாதலாலும் சிதம்பரம் அவ்விறைவனது திருமேனியெனப்படும். இது பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றாகிய ஆகாசலிங்க ஸ்தலமாம். கனகசபையிலே சிவபெருமான் வலத் திருவடியை முயலகன் மீது ஊன்றி இடத் திருவடியைக் குஞ்சிதபாதமாய் உயர்த்திச் சதாகாலமும் திருநடனஞ் செய்தல் ஆன்மாக்களை அநாதியே பந்தித்த ஆணவாதி மலங்களை நீக்கி முத்தி இன்பங்கொடுக்கும் நோக்கமேயாம். திருவாதிரை நாளன்று எம்பெருமான் பொன்னிறப் பூக்களாகிய சிவந்தி மலர்களால் அழகுசெய்யப் படுதல் அவர் படைக்கும் வன்மையை உடையவர் என்பதைக் குறித்தற்கேயாம்.

"போற்றியாம் உய்ய ஆட்கொண் டருளும் பொன் மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்"

என்று மாணிக்கவாசகப் பெருமான் தமது திருவாசகத்தில் திருவெம்பாவையிலும்,

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளாம்"

என்று ஆண்டாளம்மையார் திருப்பாவையிலும் இம்மாதச் சிறப்பினை விதந்து கூறியிருக்கின்றனர். இவ்வாறிருக்கவும், இம்மாதம் விவாகாதி சுபகர்மங்களுக்கு நீக்கப்பட்டதன் காரணம் இது ஸ்நான ஜபதபங்கட்கு விசேடகாலமானதாலும் 'ஆலித்தே பெரும்பாரத மார்கழி' என்றபடி பாரதயுத்தம் நிகழ்ந்த மாதமானதாலும் என்பர்.—"இந்து சாதனம்"

திருஞானசம்பந்தர் புதிய திருப்பதிக ஆராய்ச்சி

[E. N. தணிகாசல முதலியார், பி. ஏ., பீ. எல்.,]

சென்ற சித்தாந்தம் மலர் 5. இதழ் 11-ல் திருவாளர் பி. ஜானகிராம் முதலியார் அவர்கள், B. A., அனுப்பிய திருக்கிளியன்னவூர் திருப்பதிகத்தைக் கண்டோம். உத்தியோக முறையில் பிரயாணங்கள் செய்யும் தமிழறிஞர்கள் ஒவ்வொருவரும் நமது முதலியார் அவர்கள் அனுப்பியதுபோல் ஆங்காங்கு வழங்கும் தமிழிலக்கிய சம்பந்தமான விஷயங்களைச் சேகரித்து அனுப்புவாராயின், தமிழ் நாட்டுக்குப் பேருதவி செய்தவராவார். இவ்வாறு வெளியிடல் நித்திரையிலிருக்கும் தமிழ் மாணவர்களைத் தட்டி எழுப்பி ஆராய்ச்சித் துறையில், அவர் மனதைப் பயன் படுத்துமென்பது திண்ணம். ஆகையால் மேற்கண்ட திருப்பதிகத்தைக் கண்ணுற்ற தமிழ் மாணவனையானும், அத்துறையில் சிறிது செல்ல முயல்வேனாக:—

மேற்கண்ட பதிகம், திருஞானசம்பந்தர் நடையைப் பயில முயன்றிருந்தும், அது வெள்ளிப் பாடலென்றே புலப்படுகின்றது. இப்பதிகத் 8, 9, 10, 11-ம் செய்யுட்கள் சம்பந்தர் பாடலைப்போல், முறையே ணன் கயிலையில் நெரிந்தமை, நாரணன், நான்முகன் அடிமுடி கா சமண சாக்கியப் பழிப்பு, அப்பதிகம் பாடுவதால் வரும் பயன் கூ கடைக் காப்பு என்பனவாம். இந்நான்குமே சம்பந்தர் பதிகங் இப்பதிகத்திற்கு முள்ள ஒற்றுமையாம். ஏனைய விடயங்களில், இட புகலிவேந்தர் பதிகங்கள்போல், சொல்வளம், பொருள்வளம் பெற்று வில்லை. இதன் செய்யுள் நடை வசன நடையினு முயர்ந்தோங்கவ சுருங்கச் சொல்லல், விளங்கவைத்த லென்னும் சொற்றொடர்கள் அமைப் சம்பந்தர் பதிகங்களில் காணப்படுவதுபோல் இதில் காணப்படவில்லை. பண்ணமைந்த பதிகங்கள் இரண்டாம் திருமுறையில் சுமார் 14 பதிகங் உள. அவற்றுடன் இதை ஒத்திட்டுக் காண்க.

மற்றும் மேல்நாட்டு இலக்கிய ஆராய்ச்சி முறையில் பரிட்சை யொன் காண விரும்புகிறேன். இது ஷேக்ஸ்பியர் முதலிய ஆங்கிலப் பெருங் க

ஒன்றுகும். அதாவது சிறந்த கவிகளில் செய்யுளடி முடிவும், அதிலுள்ள வாக்கிய முடிவும் ஒன்றுய்ப் பெரும்பாலும் இரா. இவை ஆங்கிலத்தில் ஓடு நடை வரிகள் (Run-on lines) எனக்கூறப்படும். இவை செய்யுளில் மிகுத்துக் காட்டாவிடின், அச்செய்யுள் பாடியவன் நூதனமாய்க் கவிபாட யத்தனிப்பவனென்று சந்தேகிக்க இடந் தரும். நமது சமய குரவர் பாடல்களில் இவ்வரிகள் (அடிகள், அதாவது ஈற்றடி யொழிந்த ஏனைய,.) நூற்றுக்கு அறுபதுக்குக் குறைவதில்லை. திருஞான சம்பந்தர் பாடிய முதல் பதிகமான ‘தோடுடைய செவியன்” என்னும் திருப்பதிகத்தில் ஓடுநடை வரிகள், (Run-on lines) நூற்றுக்கு அறுபதுக்குக் குறையவில்லை. இப்பதிகமோ மதுரையில் சமணரை வென்ற பிறகு பாடப்பட்டதாய்ச் சொற்றொடர் பெற்றிருப்பதால், இப்பதிகம் “தோடுடைய செவியனே”க் காட்டிலும், அதிகமான ஓடுநடை வரிகள் பெறவேண்டு மன்றோ? அவ்வாறிராது, இப்பதிகத்தின் ஒவ்வொரு அடியின் முடிவு, முற்றுப்புள்ளி பெற்றதுபோலோ, அல்லது அதற்குச் சற்று சமானமாகவோ, நின்று நின்று தடைப்படுவதைக் காண்க. இவ்வாறு ஈற்றின்கண் செல்லாது தெற்றிக்கும் அடிகளில் விஷயப் போக்கு, ஆளுடைய பிள்ளையார் “உளங் குளிர்ந்தபோதெலாம் உகந்துகந் துரைப்பனே” என்றதுபோல் வெள்ளமாய்ப் பாயும் மொழிகளாய்க் காணப் படவில்லை.

ஆயினும் சைவத்திருவாளர் சிவத்தலத்தில் போற்றும் இப்பதிகத்தை வெள்ளிப் பாடலென்று கூறவேண்டி யிருப்பதற்கு வருந்துகின்றேன். திருமுறை இலக்கிய ஆராய்ச்சியில் சற்று ஈடுபட்டு ‘திருஞானசம்பந்தர் பதிகக் கட்டட அமைப்பு’ என்னும் கட்டுரை வெளியிட எண்ணி இருப்பதாலும், ஆதல் இப்பதிகத்தையும் வெள்ளிப் பாடல் வகைகளில் ஒன்றுய்க் காட்டவேண்டியதவசிய மாகையாலும், இதனை இங்ஙனம் துணிந்து வெளியிடலானேன். இக்கட்டுரையில் உள்ள குற்றங்களை அறிஞர்கள் களைவார்களாக.

ஸ்தலமாய
மீது ஊன்
திருநடன
களை நீக்
எம்பெ
படுச
யா

அறிக்கை

சைவத் திருவாளர் - மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் 1932ஆ ஈவரிமீ 2உ முதல் பன்னிரண்டு நாட்களில் தினம் ஒரு சூத்திரமாகச் ஞான போதத்தைப்பாடமாகச் சமாஜக் காரியாலயத்தில் நடத்துவார்க என்று எதிர் பார்க்கப்படுகின்றது. விவரங்கள் சமாஜ ஆண்டு விழாவிலும் தினசரிப் பத்திரிகைகளிலும் தெரிவிக்கப்படும்—காரியதரிசி.

குறிப்பு :—‘கடவுளே’ என்பதற்கு, காணப்பட்ட எல்லாவற்றையுங் கடந்த பொருளே யென்றுங் கூறலாம். புறக்கணியாது போற்ற வேண்டுமென்பார், ‘கண்டு கொண்டருளு’ என்றார். ஒல்லை=விரைவாக. உம்பர்=மேலிடம் - முத்தி. கங்கையைத்தடுத்தமைபோல, துன்ப வெள்ளத்தைத் தடை செய்தருளுக, என்றவாறு. ௧௪

சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா அல்குற் செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி
இங்கிவ் வாழ்வாற்ற கில்லேன் எம்பிரான் இழித்திட் டேனே.

உரை :—சுகங் கொடுப்பவனே வணக்கம், (நின்னைத் தவிர) வேறு புகல் இல்லாதேன், வணக்கம். சீற்றங் கொண்ட பாம்பின் அழகிய படத்தை யொத்த நிதம்பத்தையும், சிவந்த இதழையும், வெள்ளிய பல்லினையும், ஒளியுடைய கருங்கண்ணையும் உடைய மங்கைப் பருவத்தினளாய உமையைப் பாகமாக வுடையவனே வணக்கம். அரியைக் காளை வாகனமாக உடையவனே, வணக்கம். இவ்வுலகிலே இவ்வாழ்க்கையை நான் பொறுக்க இயலாதேன், எம்பெருமானே, (இதனை) அருவருத்து விட்டேன்.

குறிப்பு :—சரண்=புகலிடம். சீற்றங்கொண்ட காலையே, பாம்பு படமெடுத்தலின், ‘பொங்கரா’ என்றார். படத்தையே அல்குலுக்கு உவமையாகக் கொண்டார். அல்குலென்பது, மறைவிடத்துக்கு மேற்பட்ட உடற்பகுதி. ‘வாட்கண்’ என்பதற்கு வாள்போன்ற கண் என்பாரு முளர். ௧௫

இழித்தனன் என்னை யானே எம்பிரான் போற்றி போற்றி
பழித்திலேன் உன்னை என்னை யாளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி உம்பர்நாட் டெம்பி ரானே.

உரை :—யானே என்னை (மிகவும்) வெறுத்துவிட்டேன், அல்லது இழிப்படுத்திவிட்டேன், எமது வள்ளலே, வணக்கம், வணக்கம். உன்னை யான் குறை கூறேன். அடியேனை அடிமையாகவுடைய திருவடிக்கு வணக்கம். இயற்றிய தவறுகளை யெல்லாம் மன்னித்தல், பெரி

யவர்கள் கடப்பாடாகும். (ஆதலால், பெரியனீ சிறிய என்பிழையெல்லாம் பொறுத்தருள்க). காத்தருள்க. வீட்டுலகின் எமது தலைவனே, இந்த வாழ்க்கையை (விரைவில்) தொலைத்தருள்க. வணக்கம்.

குறிப்பு :—உம்பர் = வானுலக மென்பாரு முளர். ௬௬

எம்பிரான் போற்றி வானத் தவரவ ரேறு போற்றி
கொம்பர் ஆர் மருங்குல் மங்கை கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி யென்னை யாளுடை யொருவ போற்றி.

உரை :—எமது வள்ளலே வணக்கம். வானுலகிலுள்ள பலதேவர்களுள் அவ்வவர்க்குத் தக்கவாறு அருளுஞ் சிங்கமே, வணக்கம். கொடி போன்ற இடையுடைய மாதினை ஒரு பாகமுடையவனே, திருவெண்ணீறுடையாய், வணக்கம். செம்மேனி யுடைய பெருமானே வணக்கம். அழகிய தில்லைஞானப் பொதுவினையுடையாய், வணக்கம். வீடுடையானே வணக்கம்; என்னை அடிமையாகவுடைய ஒப்பற்றவனே, வணக்கம். ௬௭

ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே.

உரை :—(கடவுளாகிய) ஒருத்தனே வணக்கம். தனக்கு யாரும் நிகரில்லாத தந்தையே வணக்கம். தேவருடைய பரமாசாரியனே, வணக்கம். அடியேங்களையுடைய இளமைச் செவ்வி நிறைந்த சோதியே வணக்கம். ‘இங்கே வா’ என்று அடியேனை உன்னிடம் நீ அழைத்து ஏற்றுக்கொள்ளவேண்டும். (ஐயா) வணக்கம். (ஆதரவு யாதுமின்றித்) தனிப்பட்ட எனது துணையின்மையை யொழித்து உன்னுடைய திருவடி (த்துணை)யைக் கொடுத்தருள்க. வணக்கம்.

குறிப்பு :—தேவர் குருவாதல், ‘திருமால் இந்திரன் பிரமன் உபமனியன் தபனன் நந்தி செவ்வேளாதித் தருமமுதகுரவருக்குந் தனதருளாலாசிரியத் தலைமை நல்கி’ என்றமையாலறிக. என்றும் மாறாத எழிலுடைமைபற்றி ‘கோமளக் கொழுந்தே’ என்றார். கொழுந்து = சோதி. ‘தமியனேன் தனிமை தீர்த்தே நின்பாதம் தருகபோற்றி’ என மாறுக. ௬௮

தீர்ந்த அன்பாய அன்பர்க் கவரினும் அன்ப போற்றி
பேர்ந்துமென் பொய்ம்மை யாட்கொண் டருளிடும் பெருமை போற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாதம் நாயேற் கருளிட வேண்டும் போற்றி.

உரை :—முடிந்த அன்புருவமாய அடியாரிடத்தே அவரைப் பார்க்கிலும் மிகுந்த அன்புடையவனே, வணக்கம். எனது பொய்ம்மையை நீக்கியும் என்னை அடிமையாகக் கொண்டருள் செய்யும் பெருந்தன்மையனே, வணக்கம். (பாற்கடலிற்) பெருகிய விடத்தை உண்டு, விண்ணவர்க்கு அமுதத்தைக் கொடுத்த பேருதவியாளனே, வணக்கம். எங்கும் நிறைந்த நினது திருவடிகளை நாயனைய எனக்கு ஈந்திட வேண்டுகிறேன், (ஐய) வணக்கம்.

குறிப்பு:—தீர்ந்த, என்றது மிக மேலாகிய, சத்திநிபாதத் துத்தமர்களுடைய உயர்ந்த, பயன் கருதாத, பேரன்பை. அன்பர்க்கு அன்பே முடிந்த கருவியும் பயனுமாம். இரண்டாம் அடியில், என் பொய்ம்மையைப் பேர்ந்தும், என உரை நடைகொள்க. பெயர்த்தும் = பெயர்ந்தும். வார்ந்த = நீண்ட, பெருகிய. அயின்று = உண்டு. ஈவள்ளல் = ஈந்தவள்ளல் - வினைத்தொகை. ஆர்ந்த = நிறைந்த. ௬௯

போற்றியிப் புவனம் நீர்தீக் காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்றம் ஆகிநீ தோற்றம்இல்லாய்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாயீ றின்மை யானாய்
போற்றிஐம் புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே.

உரை:—இந்த நிலம், நீர், தீ, காற்று, வானம் என்னும் ஐம்பூதத்தினுங்கலந்து அவையானவனே, வணக்கம். எல்லா உயிர்களும் பிறத்தற்குக் காரணமாகி, நீ பிறப்பில்லாதாய், உனக்கு வணக்கம். எல்லா உயிர்களும் ஒடுங்கு முடிவிடமாய், நீ முடிவில்லாதாய், உனக்கு வணக்கம். ஐம்புல ஆசை உன்னை (இயல்பாகவே) அடையாத மாயமுடையவனே, உனக்கு வணக்கம்.

குறிப்பு:—வான், பிற பூதங்களினும் நுட்பமாய், அவற்றிற்கு இடங்கொடுத்தலின், அதனை 'ஒடு' என்பது கொடுத்து வேறு பிரித்தனர். பிறப்புக்குக் காரணமாய உடல், அகக்கருவிகள், உலகம், நுகர்பொருள் என்பன தோற்றுதற்கிடமாய மாயையோடு அத்துவிதமாய்ச் சிவசத்தி கலந்து எல்லாவற்றையுந் தோற்றுவித்தலின், 'தோற்றம் ஆகி' என்றார். ஒடுக்கஞ் செய்வானை 'ஈறு' என்றார். சிவஞான போத முதற் சூத்திரத்துள் சங்காரக் கடவுளை 'அந்தம்' என்றதுபோல. புணர்க்கை=மாயம், சேர்க்கை.'புணர்க்கையானே' என்பதற்குக்கலப்பு, என்ற பொருளில், 'தொடக்குறாது எல்லாவற்றிலுங் கலந்திருப்பவனே' என்றும் பொருள் கொள்ளலாம். ௭௦

அ. ஆனந்தத் தழுந்தல்

புணர்ப்ப தொக்க எந்தை யென்னை யாண்டு பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது நின்னொ டென்னொடென்னி தாம்
புணர்ப்ப தாக அன்றி தாக அன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக அங்க ணாள புங்க மான போகமே.

உரை நடை:—அங்கணாள, புணர்ப்பது ஒக்க எந்தை என்னை ஆண்டு பூண நோக்கினாய். நின்னொடு என்னொடு இது புணர்ப்பதன்று என்றபோது இது என்னாம். இது அன்றாக, அன்பு நின்கழற்கணே புணர்ப்பதாக, புங்கமான போகமே (நின்னொடு) புணர்ப்பதாக.

உரை:—அழகிய கண்ணாளனே, நீ ஞானாசாரியனா யெழுந்தருளி வந்து அருள் புரிதற்குரிய பக்குவம் ஒத்துவர என் அப்பனே, என்னை ஆட்கொண்டு, (நான் உன்னை) அடையும்படி திருவருட் பார்வை நல்கினாய். நின்னோடு என்னை இவ்வுடம்பானது இணக்குவதன்று என்றறிந்தபோது, இதனால் என்ன பயன்? இது ஒழிவதாக, நின் திருவடிக் கண்ணே, அன்பானது என்னைச் சேர்ப்பதாக, உயர்ந்த சிவானந்த போகமானது, என்னை நின்னொடு பொருத்துவதாக.

குறிப்பு:—கண்ணாளன்=கணவன், தோழன். பூண=அடைய. புங்கம்=உயர்வு. என்னொடு=என்னை - உருபுமயக்கம். ௭௧

போகம் வேண்டி வேண்டி லேன்பு ரந்த ராதி யின்பமும்
ஏக நின்க ழலிணைய லாதி லேனென் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி அஞ்ச லிக்கணே
ஆக என்கை கண்கள் தாரை ஆற தாக ஐயனே.

உரை நடை:—'புரந்தராதியின்பமும் வேண்டிலேன்' என மாறுக. 'ஐயனே' என்பதை 'ஆகம் விண்டு' என்பதன் முன்கொள்க. 'என் கை' என்பதைக் 'குஞ்சி' என்பதன்முன் கொள்க.

உரை:—சிவபோகத்தை விரும்பி, இந்திரன் முதலிய இறையவர் பதவிக்குரிய இன்பங்களை விரும்பிற்றிலேன். ஒருவனே, எனது தலைவனே, உன் திருவடி யிரண்டுமன்றி வேறு யாதுந் துணையில்லேன். அப்பனே, உடம்பு (புளியம் பழத்து ஓடுபோல) என்னின் வேறாகப் பெற்று, நடு நடுங்க, எனது கைகள் சிரமீது கும்பிடுந் தொழிற்கண்ணே பொருந்துக. கண்களின் நின்று விழும் நீரொழுங்கு ஆறாகப் பெருகுவதாக.

குறிப்பு:—'போகம் வேண்டி' என்பதற்கு உலக போகங்களை விரும்பி, என்றும் பொருள் கொள்வர். ஏக, என்பதற்கு, செல்வதற்கு எனவும் பொருள் கொண்டு, நின்கழலிணையன்றிச் செல்வதற்கு வேறிடமில்லேன் என்று முரைப்பர். விண்டு=வேறுபட்டு. கம்பம்=நடுக்கம். வந்து=வர, குஞ்சி=ஆண் தலைமயிர். தாரை=ஒழுங்கு. ௭௨

ஐய நின்ன தல்ல தில்லை மற்றொர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை பொய்மை யேனென் எம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த அன்ப ரன்பெ னக்கு மாக வேண்டுமே.

உரைநடை:—'அன்பரன்பு பொய்மையேன் எனக்கும்வந்து ஆக வேண்டுமே' என உரை நடை கொள்க.

உரை:—ஐயனே, உன்னுடைய ஆதரவன்றி, வேறொரு ஆதரவு இல்லை. அப்படியிருந்தும் கள்வனேன் பொய்யினைச் சேர்ந்திருப்பதன்றிப் பிறிதில்லை. என் தலைவனே, மைதீட்டிய கண்ணையுடைய அம்மைபாகனே, நின் திருவடிக் கண்ணே மெய்யைச்சார்ந்த அன்பர்க

ளுடைய அன்பு பொய்மையுடையேனாகிய எனக்கும் வந்து அமைதலை வேண்டுகின்றேன். ௭௩

வேண்டும் நின்கழற்கண் அன்பு பொய்மை தீர்த்து மெய்மை
ஆண்டுகொண்டு நாயினேனை ஆவ என்றருளுநீ [யே
பூண்டுகொண்டடியனேனும் போற்றி போற்றியென்றுமென்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின்வணங்கவே.

உரை நடை :—'மன்ன' என்பதை முதலிலும், 'அன்பு நின் கழற்கண் வேண்டும்' என்பதை யிறுதியிலுங் கொள்க.

உரை :—அரசனே, பொய்யினை நீக்கி உண்மையாகவே ஆட்கொண்டருளி நாயனேயேனுக்கு ஐயோ என்றிரங்கியருளுக. உன் திருவடிகளைச் சென்னி மேற்கொண்டு, கடையேனாகிய யானும் வணக்கம் வணக்கம் என்று எப்போதுஞ் சொல்லிப் (பிறவிவரினும்) இறந்திறந்து மீட்டும்மீட்டும் உன்னையே வணங்குதற்கு உன் திருவடிக்கண் (அயரா) அன்பினை வேண்டுகின்றேன்.

குறிப்பு :—ஆவ, இரக்கக் குறிப்பு. ஐயோ என்றிரங்கியருளுகின்ற என்றும் கொள்ளலாம். ௭௪

வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும் வேதம்நான்கும் ஓலமிட்
டுணங்கு நின்னை எய்தலுற்று மற்றொருண்மை யின்மையின்
வணங்கி யாம்விடேங்க ளென்ன வந்து நின்றருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க என்கொலோ நினைப்பதே.

உரை நடை :—'மங்கைபங்க' 'மற்றொருண்மையின்மையின்' என்பவற்றை முதலிற்கொள்க. நின்னை எய்தலுற்று உணங்கும் என மாறுக.

உரை :—நெருங்கிய நகில்களையுடைய மாதினை யொருபாகமுடையவனே, உன்னையன்றி வேறொரு மெய்ப்பொருள் இல்லாமையால், மண்ணுலகமும் விண்ணுலகமும் உன்னை அடைய விரும்பி வழிபடுகின்றன. மறைகள்நான்கும் (உன்னைக்காண) ஓலமிட்டுக்காணப்பெறாமையால் வாடுகின்றன. அடியேங்களாகிய நாங்களும் உன்னை வணங்கி விடமாட்டோம்; என்று கூறவும், நீ வெளிப்போந்தருள் செய்தற்குத்

தடையாக) யாதினை நினைக்கின்றாய். (அவ்வாறுநினையாது) இணங்குவாயாக.

குறிப்பு:—'இணங்கு' என்பதைக் கொங்கை என்பதோடு கூட்டுதல் ஒரு முறை, 'அருளுதற்கு' என்பதோடு கூட்டிப் பொருளுரைப்பதுண்டு. 'மற்றொருண்மை யின்மையின் என்கொலோ நினைப்பதே' என இயைத்து, வேறு மெய்ப்பொருளின்மையின், நின்னைத் தவிர எதனை நாங்கள் நினைப்பது, என்றுங் கூறுப. ௭௫

நினைப்ப தாக சிந்தை செல்லு மெல்லை யேய வாக்கினால்
தினைத்தனையு மாவ தில்லை சொல்ல லாவ கேட்பவே
அனைத்துலகு மாய நின்னை ஐம்பு லன்கள் காண்கிலா
எனைத்தெனைத்த தெப்பு றத்த தெந்தை பாத மெய்தவே.

உரை :—நின்னை மனம் நினைத்தறிவதற்காக மேற்பட்டுச் செல்லும். அது செல்லும் அளவைப் பொருந்துவதற்கு, சொல்லினால் ஒரு சிறிதும் கூடவில்லை. சொல்லக்கூடியவை யெல்லாம், காதினாற் கேட்கப்பட்டனவே. எல்லாவுலகமுமான உன்னை மெய்யின்கணுள்ள ஐம்பொறியறிவுகள் அறியமாட்டா. எமது தந்தையாகிய நின்னுடைய திருவடியை அடைய, அது எவ்வெவ்வளவினதோ, எவ்விடத்துள்ளதோ தெரிகிலேன்.

குறிப்பு :—தினை - சிற்றளவிற்கு அறிகுறி. உலகினில் இறைவன் கலந்திருந்தாலும், அவன் தன்னைக் காட்டினாலொழிய, அறியக் கூடாமையின், 'ஐம்புலன்கள் காண்கிலா' என்றார். அசுத்தமாயையும் சுத்தமாயையுங் கடந்து நின்றமையால், 'எனைத்தெனைத்து' என்றார் போலும். ௭௬

எய்த லாவ தென்று நின்னை எம்பி ரானிவ் வஞ்சனேற்(கு)
உய்த லாவ துன்கண் அன்றி மற்றொ ருண்மை யின்மையின்
பைத லாவ தென்று பாது காத்தி ரங்கு பாவியேற்(கு)
ஈத லாது நின்கண் ஒன்றும் வண்ண மில்லை ஈசனே.

உரை நடை :—'ஈசனே' என்பதை மூன்றும் அடியின் தொடகத்திற் கொண்டு பொருள் கூறுக.

உரை :—எம்பெருமானே, உன்னை அடைதலாதல் எப்போது? இக்கள்வன் ஆகிய எனக்கு உன்னிடமன்றி உய்யும் வழிக்கு வேறொரு மெய்ம்மை இல்லாமையால், ஆண்டவனே, சிறுவனென்று கருதிப் பாவியேனைக் காப்பாற்றி எனக்கு இரங்கியருள்க. (நீ இரங்கியருள்கின்ற) இச்செயலன்றி, உன்பால் வந்து ஒன்றுகும் வழி வேறில்லை.

குறிப்பு ;—பைதல்=குழந்தை, சிறுவன். ஒன்றும் வண்ணம்=ஒன்று சேரும் விதம். ௭௭

ஈசனேநீ அல்ல தில்லை இங்கும் அங்கும் என்பதும் [ன்
பேசினேன்ஓர் பேத மின்மை பேதை யேன்என் எம்பிரா
நீசனேனை ஆண்டு கொண்ட நின்ம லாவொர் நின்னலால்
தேச னேயொர் தேவ ருண்மை சிந்தி யாது சிந்தையே.

உரைநடை :—'எம்பிரான்' என்பதை முதலிற் கொள்க. 'பேதமின்மை, பேதையேன்' என்பதை இரண்டாம் அடியின் முதற்கண் கொள்க.

உரை :—எமது தலைவனே, ஆண்டவனே, இகத்திலும் பரத்திலும் உன்னையன்றி யாதும் இல்லையென்பதும், நீ வேறுபாடின்றி யாண்டுங் கலந்துள்ளாய் என்பதும், அறிவில்லாத யான் எடுத்துரைத்தேன். (உரைத்தலாற்) பயன் என்ன? புலையனேனை ஆட்கொண்ட மாசற்றவனே, ஒளியானவனே, ஒப்பற்ற உன்னையல்லாமல், பிறிதொரு கடவுள் உண்டென்பதை எனது மனம் நினைக்க மாட்டாது. ௭௮

சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீறில் ஐம்பு லன்களான்
முந்தை யான காலம் நின்னை எய்தி டாத மூர்க்கனேன்
வெந்(து) ஐயா விழுந்தி லேன்என் உள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை யாய நின்னை யின்னம் எய்த லுற்றி ருப்பனே.

உரைநடை:—'முந்தையான காலம்' என்பதை முதலிற் கொள்க.

உரை :—(நீ என்னை ஆட்கொண்ட) முன்னாகிய காலத்திலே, மனம், வாக்கு, செயல், உலகக் கேள்வி, நயமில்லாத ஐம்புலன்கள், முதலிய தடைகளினாலே உன்னை அடைந்திடாத மூடனேன் அக்காலத்திலேயே உடல் தீயிற் பொருந்தப்பெற்று இறந்து வீழ்ந்தேனில்லை. மனம் நாணி, (நாணமிகுதியால்) இறந்தேனில்லை. எமது அப்பனாகிய உன்னை இன்னுங்கூட வந்தடையாது, அடையக் கருதி இங்கிருப்பேனாயினேன். (இது எவ்வளவு பரிதாபம்?)

குறிப்பு :— சிந்தை முதலியன, மாயாகாரியங்களாய்த் தடை விளைத்தன என்பதே கருத்து. அவை கருவியாகாமை தெளிக. அடிகளின் தீவிர பக்குவங் குறிப்பது, இச்செய்யுள். ௭௯

இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை ஆண்டு கொண்ட நின்னதாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ னைக்க லந்து போகவும்
நெருப்பு முண்டு யானு முண்டி ருந்த துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்கண் என்கண் என்ப தென் அவிச்சையே.

உரை :—இரும்புபோலக் கடுமையான மனமுடைய கள்வனேனை ஆட்கொண்டருளிய நின்னுடைய திருவடியிலெழுங் கரும்புத் தேன் என்னை விழுங்கி உடன் கலந்து செல்லவும் (உடனே உடல் விடுதற்கு) நெருப்பிருந்தது, அடியேனும் உணவுகொண்டு உலகிலிருந்த துண்டு எனினும், (நெருப்பில் உடலை நீத்து உன்னை அடையாத நான்) என்னிடத்தில் உன்பால் அன்பு முண்டென்று கூறுதல் என் அறியாமையே.

குறிப்பு :—உடம்பு நிலைத்தற்குக் காரணமாய உலகப்பற்றிருப்பதாகக் கருதித் தம்மை 'வஞ்சனேன்' என்றார். கருப்புமட்டு=கருப்பஞ்சாறு. அது வாய்மடுத்தமை திருவண்டப்பகுதியிற் காண்க. ௮௦

௯. ஆனந்த பரவசம்

விச்சுக் கேடுபொய்க் காகா தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானா ரெல்லாரும் வந்துன் தாள்சேர்ந்தார்
அச்சத் தாலே ஆழ்ந்திடு கின்றேன் ஆரூர்எம்
பிச்சைத் தேவா என்நான் செய்கேன் பேசாயே.

உரைநடை :—'பொய்க்கு விச்சுக்கேடு ஆகா' எனமாறுக. 'ஆரூர் எம் பிச்சைத் தேவா' என்பதை மூன்றும் அடியின் முதலிற் கொள்க.

உரை :—பொய்யானது (உலகத்திலே நிலை பெறுவதற்கில்லாது) அதன் வித்துக் கெட்டொழிதல் கூடாதென்பதற்காகப் (பொய்யனே

உரை :—எம்பெருமானே, உன்னை அடைதலாதல் எப்போது? இக்கள்வன் ஆகிய எனக்கு உன்னிடமன்றி உய்யும் வழிக்கு வேறொரு மெய்ம்மை இல்லாமையால், ஆண்டவனே, சிறுவனென்று கருதிப் பாவியேனைக் காப்பாற்றி எனக்கு இரங்கி யருள்க. (நீ இரங்கியருள் கின்ற) இச்செயலன்றி, உன்பால் வந்து ஒன்றாகும் வழி வேறில்லை.

குறிப்பு ;—பைதல்=குழந்தை, சிறுவன். ஒன்றும் வண்ணம்= ஒன்று சேரும் விதம். ௭௭

ஈச னேநீ அல்ல தில்லை இங்கும் அங்கும் என்பதும் [ன்
பேசி னேன்ஓர் பேத மின்மை பேதை யேன்என் எம்பிரா
நீச னேனை ஆண்டு கொண்ட நின்ம லாவொர் நின்னலால்
தேச னேயொர் தேவ ருண்மை சிந்தி யாது சிந்தையே.

உரைநடை :—'எம்பிரான்' என்பதை முதலிற் கொள்க. 'பேத மின்மை, பேதையேன்' என்பதை இரண்டாம் அடியின் முதற்கண் கொள்க.

உரை :—எமது தலைவனே, ஆண்டவனே, இகத்திலும் பரத்தி லும் உன்னையன்றி யாதும் இல்லையென்பதும், நீ வேறுபாடின்றி யாண்டுங் கலந்துள்ளாய் என்பதும், அறிவில்லாத யான் எடுத்துரைத் தேன். (உரைத்தலாற்) பயன் என்ன? புலையனேனை ஆட்கொண்ட மாசற்றவனே, ஒளியானவனே, ஒப்பற்ற உன்னையல்லாமல், பிறி தொரு கடவுள் உண்டென்பதை எனது மனம் நினைக்க மாட் டாது. ௭௮

சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீறில் ஐம்பு லன்களான்
முந்தை யான காலம் நின்னை எய்தி டாத மூர்க்கனேன்
வெந்(து) ஐயா விழுந்தி லேன்என் உள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை யாய நின்னை யின்னம் எய்தலுற் றிருப்பனே.

உரைநடை:—'முந்தையான காலம்' என்பதை முதலிற் கொள்க.

உரை :—(நீ என்னை ஆட்கொண்ட) முன்னாகிய காலத்திலே, மனம், வாக்கு, செயல், உலகக் கேள்வி, நயமில்லாத ஐம்புலன்கள், முதலிய தடைகளினாலே உன்னை அடைந்திடாத மூடனேன் அக் காலத்திலேயே உடல் தீயிற் பொருந்தப்பெற்று இறந்து வீழ்ந்தே

னில்லை. மனம் நாணி, (நாணமிகுதியால்) இறந்தேனில்லை. எமது அப்பனாகிய உன்னை இன்னுங்கூட வந்தடையாது, அடையக் கருதி இங்கிருப்பேனாயினேன். (இது எவ்வளவு பரிதாபம்?)

குறிப்பு :— சிந்தை முதலியன, மாயாகாரியங்களாய்த் தடை விளைத்தன என்பதே கருத்து. அவை கருவியாகாமை தெளிக. அடி களின் தீவிர பக்குவங் குறிப்பது, இச்செய்யுள். ௭௯

இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை ஆண்டு கொண்ட நின்ன தாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ னைக்க லந்து போகவும்
நெருப்பு முண்டு யானு முண்டி ருந்த துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்கண் என்கண் என்ப தென் அவிச்சையே.

உரை :—இரும்புபோலக் கடுமையான மனமுடைய கள்வனேனை ஆட்கொண்டருளிய நின்னுடைய திருவடியிலெழுங் கரும்புத் தேன் என்னை விழுங்கி உடன் கலந்து செல்லவும் (உடனே உடல் விடுதற்கு) நெருப்பிருந்தது, அடியேனும் உணவுகொண்டு உலகிலிருந்த துண்டு எனினும், (நெருப்பில் உடலை நீத்து உன்னை அடையாத நான்) என் னிடத்தில் உன்பால் அன்பு முண்டென்று கூறுதல் என் அறியா மையே.

குறிப்பு :—உடம்பு நிலைத்தற்குக் காரணமாய உலகப்பற்றிருப் பதாகக் கருதித் தம்மை 'வஞ்சனேன்' என்றார். கருப்புமட்டு=கருப் பஞ்சாறு. அது வாய்மடுத்தமை திருவண்டப்பகுதியிற் காண்க. ௮௦

௯. ஆனந்த பரவசம்

விச்சுக் கேடுபொய்க் காகா தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானா ரெல்லாரும் வந்துன் தாள்சேர்ந்தார்
அச்சத் தாலே ஆழ்ந்திடு கின்றேன் ஆரூர்எம்
பிச்சைத் தேவா என்நான் செய்கேன் பேசாயே.

உரைநடை :—'பொய்க்கு விச்சுக்கேடு ஆகா' எனமாறுக. 'ஆரூர் எம் பிச்சைத் தேவா' என்பதை மூன்றாம் அடியின் முதலிற் கொள்க.

உரை :—பொய்யானது (உலகத்திலே நிலை பெறுவதற்கில்லாது) அதன் வித்துக் கெட்டொழிதல் கூடாதென்பதற்காகப் (பொய்யனே

னாகிய) என்னை இவ்வுலகத்தே இருத்தினாய். உன் விருப்பத்திற்கு ஒத்தவர்களெல்லாரும்போய் உன் திருவடியை அடைந்தார்கள். திருவாரூரில் வீற்றிருக்கும் எமது ஐயங்கொன் பிரானே, நான் பயத்தாலே அழுந்துகின்றேன். நான் (உய்வதற்கு) யாதுசெய்வேன், கூறியருள் வாயாக.

குறிப்பு :— ஆரூராகிய இதயத்திலுறையும் பிச்சைத் தேவா, எனக்கு அருட்பிச்சைபோடு என்று குறிப்பித்தவாறு காண்க. விச்சு = வித்து. பொய்க்கு = பொய்யின் - உருபு மயக்கம். ௮௧

பேசப் பட்டேன் நின்னடி யாரில் திருநீறே
பூசப் பட்டேன் பூதல ரால்உன் அடியானென்(று)
ஏசப் பட்டேன் இனிப்படு கின்ற தமையாதால்
ஆசைப் பட்டேன் ஆட்பட் டேன்உன் அடியேனே.

உரை :—உனது அடியாருள் ஒருவனாகப் பெரியோரால் எடுத்துரைக்கப்பட்டேன். (அருட்பேற்றிற்கு அறிகுறியாகிய) திருநீறே பூசுதலைப் பொருந்தினேன். உலகரால், (என் அமைச்சு நிலைமாறி) உனது அடியானாயினேனென்று இகழப்பட்டேன். இனி இவ்வுலகிற் பொருந்தி யிருத்தல், பொருந்தாது. (வீடடைய) ஆசைப்பட்டேன். உனக்கடிமையானேன், இனி, (உன்னடியானா யிருப்பதன்றிப் பிறர்க்குரியனாகேன்) ஆதலால், எப்படியும் உன்னடியேனே, (நீ காத்திட வேண்டும்) என்றவாறு.

குறிப்பு :—பெரியோர் பேச, உலகர் ஏசினமை கூறினர். படுகின்றது = (உலகிற் பொருந்துகின்றது.) அமையாது = பொருந்தாது. ஆல் - அசை. ௮௨

அடியேன் அல்லேன் கொல்லோ தானெனை ஆட்கொண்டிலை
அடியா ரானா ரெல்லாரும் வந்துன் றாள்சேர்ந்தார் [கொல்லோ
செடிசேர் உடலம் இதுநீக்க மாட்டேன் எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக் காணுமா று காணேனே.

உரை :—நான் உன்னுடைய அடியான் அல்லனோ? நீதானே என்னைவந்து ஆட்கொள்ள வில்லையோ? அப்படியானால் அடியாராகிய பிறரெல்லோரும்போய் உன்திருவடியைச் சேர்ந்துவிட்டார்களே. எங்களது சிவலோகமுதல்வனே, தீவினைபொருந்தும் உடம்பாகிய இதனை ஒழிக்கமாட்டேனாகிய, கடினமான நெஞ்சுடையேன் உன்னை நேரே கண்குளிரப் பார்க்கும் வழியை அறியேனே.

குறிப்பு :—பிற அடியாரடைந்த வீட்டினைத் தலைப்படாமையால் அடிகள், தம்மை அவன ஆண்டமையும், தாம் அடிமையானது மில்லையோவென் றையுறுவார்போன்றனர். செடி = பாவம், குணமின்மை, தீவினை. கடியேன் = கடுமை யுடையேன். காணும் ஆறு = காணும் வழி. ௮௩

காணுமா று காணேன் உன்னை அந்நாட் கண்டேனும்
பாணே பேசி என் தன்னைப் படுத்த தென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆரமுதே அத்தா செத்தே போயினேன்
ஏண்நாணில்லா நாயினேன் என்கொண் டெழுகேன் எம்மானே.

உரைநடை :—‘ எம்மானே ’ என்பதை முதலிற் கொள்க.

உரை :—எமது பெரியோனே, அறியும்வழியாக உன்னை அறிய மாட்டேன், உன்னை நீ ஆட்கொண்ட அந்நாளிலே காணப் பெற்றும், பாழானவற்றைப் பேச என்னைக் கீழ்ப்படுத்தியது யாதோ, மேலான ஒளிப்பிழம்பே, ஆணுயவனே, பெண்ணுயவனே, தெவிட்டாத அமுதமே, அப்பனே, நான் பயனற்றொழிந்தேன், வலியுமானமு மில்லா நாயனையேன், எதனைத் துணையாகக் கொண்டு மேற்செல்வேன்?

குறிப்பு :—பாண் = பாழ். பேசி, பேச, பேசி யொழிய. ஏண் = வலி. ௮௪

மானேர் நோக்கி யுமையாள் பங்கா மறையீ றறியாமறையோனே
தேனே அமுதே சிந்தைக்கரியாய் சிறியேன் பிழைபொறுக்குங்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன் சிவமாநகர்குறுகப்
போனார் அடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே.

உரை :—மான்போன்ற விழியுடைய எம்மை உடையாளாகிய அருட்சத்தி பாகனே! வேதமுடிவும் அறிய வொண்ணா இரகசியப் பொருளாவானே, தேன்போ லினியவனே, அமுதுபோற் சாவா மருந்தே, மனத்தாற் கிட்டுதற் கரியவனே, சிறுமை யுடையேனது

குற்றத்தைப் (பெருமையாற்) பொறுத்தருளும் அரசனே. அடியேன் ஒரு சிறிது கொடியவற்றைக் கூறினேன். அடியார் சிவபெரும் புவனமடையச் சென்றனர், அடியேனும் பொய்யும் அவர்க்குப் புறம்பாக உலகிற் போயினேம்.

குறிப்பு :—அடிகள் 'சிறிதுகொடுமை பறைந்த' தியாதெனத் தெரியவில்லை. அடியார் பலரும் சிவபுரம் புகுதலை விரும்ப, தாம் உலகிற் சின்னாளிருக்க இசைந்தமையை அவ்வாறு கூறி யிருத்தல் கூடும். 'ஏலத்தன்னை ஈங்கொழித் தருளித்' தில்லைக்கு வரும்படி இறைவன் பணித்ததை யொப்புக் கொண்டது, உடனே சிவபுரஞ்சேர இயலாமைக் கேதுவாயிற்று. நேர்மைக்கு மாறு, கொடுமை; நேரே சிவபுரம் போதற்குமாறாய் உலகிலிருத்தல் கொடுமையாயிற்றுப் போலும். ௮௮

புறமே போந்தோம் பொய்யும் யானும் மெய்யன்பு
பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன்யான்
அறவே நின்னைச் சார்ந்த அடியார் மற்றொன் றறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே நின்தாள் சேர்ந்தாரே.

உரை :—நிலையா உடம்பும் யானும் நினக்குப்புறம்பே போயினேம், உண்மையன்பு பெறுதற்கே உரியனல்லா முறைமையை யான் அடைந்தேன். முற்றிலும் உன்னையடைந்த அன்பர், உன்னைத் தவிர, வேறொன்றையு மறியாதாராய்ச் சிறப்பாக வீட்டிற்குரியதே செய்து செந்நெறியிற் சென்று சிவபெருமானே உன்னடி யடைந்தனர்.

குறிப்பு :—உடலிருத்தலைக் கருதாதஅன்பர் வீட்டிற்குரியவாறே செய்வன செய்து அதனைப்பெற்றா ரென்பது குறிப்பு. உடலையுங் கடவுளையுங் கருதாது, கடவுளையே கருதி மற்றவற்றை யொழித்தன ரென்பார், 'அறவே நின்னைச் சார்ந்த' என்றார். சிறவு = சிறப்பு. ௮௯

தாராய் உடையாய் அடியேற் குன்தா ளிணையன்பு
பேரா வுலகம் புக்காரடியார் புறமே போந்தேன்யான்
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்திங் குன்தா ளிணையன்புக்
காராய் அடியேன் அயலே மயல்கொண் டெழுகேனே.

உரை :—என்னை உடையவனே, அடியேனுக்கு உனது இரண்டு திருவடிகளிலும் செய்யவேண்டிய அன்பினைத் தருவாயாக. மீளாத

செய்தல் அரியதாயின், வன்மைமிக்க மூங்கிலைப்போல உருக்கமற்ற என்னுடைய வினையை நாசமாக்கிய பின்னுவது, நினது தண்ணருட் பாதங்களை விரைவாக நீயே வலியவந்து தரவேண்டும்.

குறிப்பு :—பன்னாட் பயின்று அன்பு செலுத்துதலிற் றேர்ந்தவ ரென்பார், 'பழைய அடியார்' என்றார். திணி = திண்மையுடையது. தணி தண்மையுடையது. உருக்கமின்மையின், 'திணி' என்றார். பிறவி வெப்பத்திற்கு நிழலாதலின், 'தணி' என்றார். ஒல்லை = விரைவு. 'பொய் தீர்' என்பதற்கு இயற்கையாகவே, பொய்யிற்றீர்ந்த என்றும் பொருள் கொள்ளலாம். மனக்கோட்டமும் உருக்க மின்மையுங் குறிப்பார், 'மூங்கில்' என்றார். பொடி = சாம்பல். மூங்கில், உருகாது சாம்பரேயாகும்.

யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே.

உரை :—அடியார்களுள், யான் ஒருவனே பொய்மயமானவன், என் மனமும் வஞ்சமுடையதே, என்அன்பும், களங்கமற்ற தன்று, ஆனால் தீவினையுடையேன், (பிழையுணர்ந்து வருந்தி) அழுவேனாயின் உன்னை அடையலாமே, தேனே, அமுதே, கருப்பஞ்சாறே, இவை போல இனிமை பயக்கும் பெரியோனே, அடியேன் உன்னை வந்து கலக்குமாறு அருள் புரிவாயாக.

குறிப்பு :—மான் = மகான் - பெரியோன் ; தேன், அமுது கருப்பஞ்சாறு, இச்சை அறிவு செயலுக்கு இன்பந் தருவதென்ற குறிப்பு. ௯௦

உலகமாகிய வீட்டினுள் உன்மெய்யடியார் போய்ப் புகுந்தனர். யான் வெளியேபோ யொழிந்தேன். ஊரிலுள்ள நல்ல பசு (நற்புலங்களிலே புல்) மேய்ந்திட, அதனோடு சென்ற குருட்டுப்பசுவும் மேய்ந்தது என்றாற்போல, உன்னுடைய இணையடிகளில் அன்பு பெறுதற்கு எத்தன்மையனாய் அடியேன், மெய்யடியார் பாங்கே விருப்பங்கொண்டு முயறுதல் கூடும், கூறியருள்க.

குறிப்பு :—ஊர்ப் பசுவொடுசென்ற குருட்டுப்பசு மேய்ந்தது. உன் மெய்யடியாரோ, வீடுசென்றனர். அன்புக்கண் இலனாகிய நான் அவரோடு சேர்ந்து போதற்கிடமில்லை. இனி யார்பக்கமாக, எப்படி நான் சென்று பயனடைதல் கூடும் என்றார். மிலைத்தல்=மேற்கொள்ளுதல் - ஈண்டுப் புல்லினை மேற்கொண்டு தின்றலாம். 'போரா' என்ற பாடமுமுண்டு. அதனைப் போதா என்பதன் மரூஉவாகக்கொள்வர். அஎ

அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய் அழல்சேர்ந்த
மெழுகே அன்னார் மின்னார் பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண் டுன்னைப் பணிகேனே.

உரை :—உன்னிடத்தே அன்புமயமான உள்ளத்தோடு அழுது தொழமாட்டேன். தீயிடைப்பட்ட மெழுகுபோன்ற உள்ளத்தாராய அடியார், மின்னொளி பொருந்திய அழகிய நினது திருவடிகளைக்கண்டு வணங்கி உன்னைப் பின்தொடர்ந்திட்டனர். அவரோடு தொடர்ந்து செல்லாது, வீணே பிறவியெடுத்தேனாகிய யான் எத்தனை கொண்டு உன்னை வணங்குவேன்? அஅ

பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய அடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி அதுவும் அரிதென்றால்
திணியார் மூங்கி லனையேன் வினையைப் பொடியாக்கித்
தணியார்பாதம் வந்தொல்லை தாராய் பொய்தீர் மெய்யானே.

உரை :—பொய்ப்பற்றை ஒழிக்கின்ற மெய்ப்பொரு ளானவனே, வழிபடுவாரது நோயை அகற்றியருளிப் பழைமைமிக்க அடியார்கட்கு, உனது அழகு நிறைந்த திருவடிகளை, அளித்தருள்வாய், எனக்கு அது

மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பர்உன் மெய்ம்மை மேவினார்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவதோ சொலாய் பொருத்த மாவதே.

உரை:—தீட்டிய மை விளங்குகின்ற அழகிய கண்ணையுடையாள் பாகனே! நீ குருவாய் எழுந்தருளிவந்து என்னைத் தொண்டனாக்கிய பின், மெல்லிய கையிலே விளங்கும் பொன்னாலாகிய வள்ளம் அல்லது வட்டில்போல உன்னை எளியாய் என்று கருதியதல்லாமல், எய்துதற் கருமை யுடையாயென் றெண்ணவில்லை. திருமேனியில் விளங்குகின்ற வெள்ளிய திருநீற்றின் ஒளியுடையாய், உனது மெய்யன்பர்கள் உண்மை நிலையை அடைந்தனர். பொய் விளங்கு மியல்புடைய என்னை இந்நிலவுலகிலே கைவிட்டுப்போதல் பொருத்தமாவென்று சொல்லி யருள்க.

குறிப்பு :—உன்னைத் தொடர்ந்து பற்றாது மெத்தனமாய் இருந்தேனென்பார் 'எளியை என்றெண்ணினே' னென்றார். இறைவன் பொன்மேனி யுடையனாய் அருளமுதக்காட்சி நல்கினமையின், இனிய பால் உணவுவைத்த பொன் வண்ணத்திற்கு அவனை உவமித்தார். இறுகப்பிடிக்க இயலாமையின் 'மழக்கை' என்றார். ஆட்கொண்டபின் பொய்யைத் தீர்த்துச் சேர்த்துக்கொள்ளுதல் பொருத்தமா மன்றித் தள்ளிவிடுதல் தக்கதன்றெனக் குறிப்பித்தனர். கூஉ

பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
போதஎன்(று) எனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி இங்கெனை
இருத்தி னாய்முறை யோஎன் எம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே.

உரை :—உன் திருவருளைப் பெறுதற்குத் தகுதியில்லாதேன் நிலையாதவற்றின் பற்றுடையேன். அத்தகைய என்னை வருகவென்

௧௦. ஆனந்தாதீதம் - பேரின்ப மேலீடு

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
    வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
    மெய்மை அன்பருன் மெய்மை மேவினார்
ஈறி லாதநீ எளியை யாகிவந்
    தொளிசெய் மானுட மாக நோக்கியுங்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
    கடையன் ஆயினேன் பட்ட கீழ்மையே.

உரை :—(என்றும் மாற்றமில்லாத பேருட்கடலே) எனக்கு முன்பாகவே நின்பாற்சென்று பூவின் தன்மையைக் கொண்ட நினது திருவடி யிரண்டையும் விட்டு நீங்காத நிலையாகிய சிறப்பைப் பெற்ற நினது உண்மை யன்பர்கள் உனது மெய்த்தன்மையை அடைந்தார்கள். முடிவில்லாத (பெருந்தகையாய) நீ எளி வந்தருளி அருளொளி காலும் மனித வடிவத்தொடு திருக்கண் பார்வை நல்கியும், பிளவுபட்டுருகாத (திண்ணிய) மனமுடையேனானேன். கீழ்ப்பட்டவனாகிய நான்பட்ட இழிவை என்னென்பது.

குறிப்பு :—பிறகடல்கள் ஊழிமுடிவில் வற்றினாலும், இறையருள், மாற்றமிலாதது. 'மாறு' என்பதற்குக் கைம்மாறெனப் பொருள் கொண்டு 'பயன் கருதாத' என்று பொருளுரைப்பினுமமையும். மலர் = மலர்த்தன்மை அல்லது பூக்கள். பரிசு = சிறப்பு, மெய்ம்மை = நிலையான தன்மை, பேராவியற்கை. இறைவன் குருவாய் வந்ததையே 'மானுடமாக' என்றார்.
கக

மையி லங்குநற் கண்ணி பங்கனே
    வந்தெனைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
    அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்